
# திராவிடநாடு



# கேட்டீரா சேதி!

"போடாதீர் மாலை!" என்று உபதேசம் புரிந்திருக்கிறார், அமைச்சர் பக்தவத்சலம். "இந்தியா அடிமைப்பட்டிருந்தபோது வெள்ளையரிடமிருந்து ஏதாவது ஒரு அனுகூலத்தைப்பெறமாலைகள் போட்டு, 'தாஜா' செய்ய வேண்டியிருந்தது. சுதந்திர இந்தியாவில் அந்த நிலை இல்லை. ஆகவே, இப்படி மாலைகள்போட வேண்டிய அவசியம் இல்லை" என்று கோவையில் செப். 23-ந் தேதி கூறியிருக்கிறார், அவர். மாலைகள் 'தாஜா' செய்வதற்காக மட்டும் போடுவதாக அமைச்சருக்குத் தெரிகிறது! குற்றமுள்ள நெஞ்சு!

*

மாலையைத் துறந்து மகத்தான 'தியாக புத்தி'யை நிரூபிக்க அமைச்சர் முன்வந்த இதே தேதியில் விருது நகரிலிருந்து ஒரு சேதி வருகிறது. கே. பி. சங்கரலிங்க நாடார் என்னும் காங்கிரஸ்காரர் கடந்த 56-நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறாராம். ஊர்ப் பிரமுகர்கள் தடுத்தும் நிறுத்தவில்லையாம். அவர் உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்பது எதற்குத் தெரியுமா? காந்தீயக் கொள்கைப்படி காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் வாழ்க்கையை நடத்தத் தவறிவிட்டதை எடுத்துரைத்து சரியான வழியில் திருப்புவதற்காக—என்று தெரிவிக்கிறார்! "ராஜ்ய, மத்ய சர்க்கார்களின் நிர்வாகத்திலுள்ள குறைபாடுகளைச் சரிப்படுத்த வேண்டும். அவசிய மற்றதும், அளவுக்கு மீறியதுமான செலவைத் தவிர்க்க வேண்டும்" என்பதும் அவரது உண்ணாவிரதத்தின் நோக்கமாகும். தொண்டர் இப்படித் துடிக்கிறார்! அமைச்சர் தூயமணியென்று பறைசாற்றிக்கொள்ள முனைகிறார்!

*

மிகப் பிரமாதமாக டில்லி அரசால் விளம்பரப்படுத்தப்பட்டதல்லவா? அந்த சூரிய அடுப்புக்கு, கிராக்கி இல்லையாம்! அதனால் மேற்படி அடுப்பு தயாரிக்கும் திட்டத்தைக் கைவிட்டுவிடுவதென டில்லி முடிவு செய்துவிட்டதாம். உள்ளூரில் விலை போகவில்லையே தவிர இந்த அடுப்புக்கு எகிப்து, பாரசீகம், நைஜீரியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய இடங்களில் கிராக்கி ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம். சூரியனின் சூட்டால், சமையல் செய்யப் பயன்படுவதுதான் இந்த அடுப்பு.

*

ஆசிய நாடுகளிலுள்ள சோஷியலிஸ்டுகளின் மாநாடு வருகிற நவம்பர் முதல் தேதி பம்பாயில் நடைபெறவிருக்கிறதாம். பர்மிய முதல் மந்திரி ஊபாஸ்வே தலைமை வகிப்பாராம். இம் மாநாடு மொத்தம் 10 நாட்களுக்கு நடக்கக்கூடும். முதல் முதலாக இது போன்ற மாநாடு 1953ல் ரங்கூனில் நடைபெற்றது. இந்தியாவின் சார்பில் செல்லும் சோஷியலிஸ்டுகளுக்கு ஜெயப்பிரகாஷ் தலைமை தாங்குவாராம். இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா உள்பட யுகோஸ்லோவியா, பிரிட்டன் முதலான இடங்களிலிருந்தும்பிரதிநிதிகள் வருவார்களெனத் தெரிகிறது.

*

மழையில் நனைந்தாலும் பிறகு எரியக்கூடிய தீக்குச்சிகளை செஞ்சீனா கண்டுபிடித்திருக்கிறதாம்! இந்தத் தீக்குச்சி பலத்த காற்று அடித்தால்கூட அணையாதாம். இது செமபடவர்களுக்கு மிக மிகப் பயன்படக்கூடும் என்று கருதப்படுகிறது.

*

கல்கத்தா துறைமுகத்தையும் கொச்சித் துறைமுகத்தையும் ஒரிஸ்ஸா — சென்னை வழியாக இணைக்கலாம் என்று டில்லி சர்க்காரின் 'தண்ணீர்க் கமிஷன்' ஒரு யோசனை கூறியிருக்கிறது. கோதாவரியிலிருந்து 400 மைலுக்கு தெற்கே இருக்கும் கால்வாய்களை மேற்குக் கரை கால்வாய்களுடன் வேதாரண்யம் கால்வாய் மூலம் இணைக்கலாமாம். இப்படி இணைப்பதால் படகுகள், நீராவிப் படகுகள் போக்கு வரத்து இலகுவாக நடைபெறக்கூடும் என்று டில்லி கருதுகிறதாம்.

*

கால்வாய்கள் மூலம் இந்திய உபகண்டத்தை இணைக்கும் இந்த யோசனை புறப்பட்டிருக்கும் இச் சமயத்தில் கோபி கிருஷ்ணவிசய வர்ஜியா என்பார் இன்னொரு யோசனை வெளியிட்டுள்ளார். அதன்படி, அரேபியக் கடலிருந்து வங்காளக்குடாக் கடல் வரை கிழக்கு மேற்காக ஒரு பெரிய கால்வாய் வெட்டலாம் என்பதுதான். விந்திய மலைக்கு அருகில் இப்படியொரு கால்வாயை வெட்டினால், கிழக்கிலிருந்து மேற்கே கப்பல்கள் எளிதில் செல்லலாம், இப்பொழுதுபோல் கன்யாகுமரியைச் சுற்றிக்கொண்டுபோக வேண்டியதில்லை என்று இவர் கூறுகிறார். இவர், டில்லி மேல் சபையில் உறுப்பினராயிருப்பவர். மத்ய பாரதத்தின் முன்னாள், முதலமைச்சர். ரஷ்யர்கள் காஸ்பியன் கடலையும் கருங்கடலையும் இணைத்திருப்பதுபோல் நாம் இந்த முயற்சியைச் செய்யலாம் என்கிறார், இவர்.

*

கருங்கடலில் சுகுமிவிரிகுடாவின் அடியில் சோவியத் விஞ்ஞானிகளால் பழைய கிரேக்க நகரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். 2500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வியாபார கேந்திரமாம் இது. ரஷ்ய விஞ்ஞானிகள் நீர்மூழ்கி சாதனங்களுடன் முயன்று கண்டுபிடித்துள்ளனர். இதுபோன்ற முயற்சிகள் எடுக்கப்பட்டால் புதையுண்ட பூம்புகாரைப் பற்றி நாம் எவ்வளவோ அறியலாம்! எங்கே செய்கிறது டில்லி?

★

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [30-9-56] தனிப் பிரதி 2 அணா [ இதழ் 13

# வேதனை வெள்ளம்

தம்பி,

நெஞ்சிலே பெருநெருப்பு மூண்டதடா, தம்பி, ஓராயிரம் நச்சுப் பாம்புகள் ஒருசேரக் கூடி, இதயத்தைக் கடித்துக் கடித்து, மென்று மென்று கீழே உமிழ்ந்தவண்ணம் இருக்கிறது, வேதனை வெள்ளத்தில் வீழ்ந்து, கரைகாணுமல் தவிக்கும் நிலையிலே இருக்கிறேன், எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று நான் சொல்லாத நாளில்லை, இதயம் தாங்கிக்கொள்ள முடியாத பெரு நெருப்பு புகுந்து, சுட்டு எரிக்கிறது, உட்கார்ந்தால் உடல் சாய்கிறது, உடலைக்கீழே சாய்த்தால் தானாக எழுகிறது, நடமாடினால் கால்கள் நடுக்கமெடுக்கின்றன, பேசினால் நாக்குக் குளறுகிறது, நண்பர்களைச் சந்தித்தாலோ, கண்ணீர் குபுகுபுவெனக் கிளம்புகிறது, ஐயயோ வேதனை, வேதனை, இது நாள்வரை நான் அனுபவித்தறியாத வேதனை, எவராலும் தாங்கிக்கொள்ள முடியாததோர் வேதனை, எந்தக் காதகனும் கன்மனம் படைத்தோனும், எண்ணவும் சொல்லவும் கூசும் விதமான கொடுமை நேரிட்டுவிட்டதே, வாழ்கின்ற இடம் நாடா, காடா, சூழ இருப்போர் மனிதர்களா, கொலைபாதகர்களா, கொடிய காட்டு மிருகங்களா, இதென்ன 1956 தானா அல்லது நாக்கறுத்து மூக்கறுத்து, கண்ட துண்டமாக்கிக் கொலைபுரியும் காட்டுமிராண்டிக் காலமா, என்றெல்லாம் எண்ண எண்ண, நெஞ்சிலே குபீல் குபீலென்று ஓர் ஜுவாலை கிளம்பி, தகித்துத் தள்ளுகிறது, என்ன செய்வது, எப்படித் தாங்கிக்கொள்வது, ஐயயோ! என்று அலறி மாரடித்து அழுது புரண்டுபுரண்டு அழுது, காணும் நண்பர்களுடன் கூடிக் கூடி அழுதாலும், கப்பிக்கொண்டுள்ள துக்கம் ஒரு துளியும் விலகுவதாகக் காணோம், என்னைப் பிடித்திழுத்து, செயலற்றவனாக்கிவிட்டது, பித்தன் போல, வெறிச் சென்றதோர் பார்வையுடன் இருக்கிறேன், பேயறைந்தது என்பார்களே, அதுபோன்றதோர் கோலம் என்னைப் பிடித்துக்கொண்டது, நான் எந்நாளும் இதுபோன்றதோர் வேதனையைக் கொண்டதில்லை.

நடுநிசிக்குமேல், இரண்டிருக்கும், அடிகள் நாக்குக் குழறக் குழற, சென்னையிலிருந்து கிடைத்த சேதியைக் கூறவந்தார்—இல்லத்தில் படுத்து, அந்தக் கிழமை இதழில் நான் நாட்டுக்கு அளித்துள்ள கருத்துகளைப்பற்றி எண்ணியபடி இருந்த என்னிடம்.

"அடிகள்?"—என்று நான் கேட்கிறேன்—படியிலிருந்து கீழே உருண்டு விழுந்து விடுபவர் போல் காணப்பட்டார். என்ன?—என்று நான் கேட்க, "நமது சாமி...தூத்துக்குடி சாமி......" என்றார், கண்ணீர் தளும்பியபடி..."என்ன, என்ன தூத்துக்குடி சாமிக்கு...என்ன?...என்ன......" நான் கேட்கிறேன், நடுக்கும் குரலில்... "யாரோ, அவரை...கொலை...போய்விட்டாராம்..." என்றார்; அந்தத் தாக்குதலிலிருந்து நான் இந்த விநாடிவரையில் மீள முடியவில்லை, முழுதும்மீள என்றைக்குமே முடியாதடா தம்பி, முடியாது, இதயத்திலே ஏற்பட்டுவிட்ட பிளவு, குறையாது, மறையாது......

அந்த விநாடியிலிருந்து வேதனை வெள்ளத்தில் வீழ்ந்துபட்ட நான், என்ன செய்வது, என்னஎண்ணுவது என்று தெரியாமல், திகைத்துப்போய், கிடக்கிறேன்......

அஞ்சாதீர்கள்—எதற்கும் கவலை கொள்ளாதீர்கள்—மலைகுலைந்தாலும் மனம் குலையாதவன் தமிழன் — இன்னல் இடுக்கண் வரிசை வரிசையாக வந்து தாக்கினாலும், கலங்காதவன் திராவிடன் — அஞ்சா நெஞ்சுடையோன்! — தம்பி, ஆயிரம் தடவை கூறி இருப்பேன், பல்லாயிரம் தடவை எழுதி இருப்பேன், மேடைகளிலே நின்று இவைதமை முழக்கியிருக்கிறேன், இதோ கவிழ்ந்த தலையைத் தூக்கிவிட முடியவில்லை, பொங்கும் கண்ணீரை நிறுத்த முடியவில்லை. பதறும் உடலத்தைக் கட்டுக்குக் கொண்டுவர இயலவில்லை, வேதனை பிடித்தாட்டுகிறது; ஆபத்து என்றால் அஞ்சா நெஞ்சம் இருந்தால் போதும் எதிர்த்து நிற்க, இதுநமது இதயத்தை அல்லவா சுட்டெரிக்கும் பெரு நெருப்பு—அந்தோ! எத்தனை நாளாக எண்ணி எண்ணித் திட்டமிட்டு, இதயத்தில் இந்தப் பெரு நெருப்பை மூட்டினரோ...எத்தகைய இதயம்

படைத்த இழிகுண மக்களோ, மனித உருவத்தை எப்படித்தான் பெற்றனரோ, அந்த மாபாவிகள்...எண்ணும்போதே நெஞ்சு வெடித்து ஓராயிரம் சுக்கலாகிவிடும் போலிருக்கிறதே...இப்படியும் ஒரு கொடுமை நடப்பதா... இதுபோன்றதோர் கொடுமை நடைபெறக்கூடும் என்று எண்ணவே நெஞ்சு நடுக்குறுமே, நடத்தினரே நாசகாலர்கள், காலம் சுமக்கிறதே அக்கயவர்களை, மண்ணிலே அவர்கள் நிற்க முடிகிறதே, எத்தனை எத்தனை இலட்சம் மக்களின் இதயத்தைப் புண்ணாக்கிவிட்டனர் அந்த இதயமற்ற கொடியவர்கள்... அந்தோ! அந்தோ! அக்ரமமே உருவான அந்த மாபாவிகள் இந்த நம் மண்ணிலே தோன்றினரே! தூத்துக்குடி சாமியை தமிழ் மாநிலமே! திரு இடமே! பெற்றெடுத்துப் பெருமை பெற்றாய் —எப்படித்தான் இத்தகையோரைப் பெற முடிந்தது. இதோ தெரிகிறானே அந்த மாவீரன், வடித்தெடுத்த வேல்போல நிற்கிறான், கொள்கைப்பற்று கொழுந்துவிட்டெரியும் கண்களால் பார்க்கிறான், உழைத்து மெருகேறிய உடற்கட்டுடன் நிற்கிறான், உறுதி படைத்த உள்ளம் எனக்கு உண்டு என்று அந்த உருவமே அறிவிக்கிறதே —திரு இடமே! இதோ உன் விடுதலையைத் தன் பேச்சாக மூச்சாகக்கொண்ட செயல் வீரனைக் காண்பாய்! உன் தளை உடைபடும் வரையில் ஓயாது உழைக்கும் நோக்குடன் தன்னைத்தானே உனக்கு அர்ப்பணித்துவிட்ட ஆற்றல் வீரனைக் காண்பாய், மக்கள் பணியன்றி வேறோர் நோக்கமில்லை, கழகத் தொண்டன்றிப் பிறிதொன்றிலே என் எண்ணம் பாய்வதில்லை என்று கூறிப் பணியாற்றி வரும், குன்றெடுக்கும் நெடுந்தோளுடையானைக் காணாய்! எவரிருக்கிறார்கள், பிறந்த நாட்டைப் பீடுடையதாக்கும் பெரும் பணியாற்ற? மக்கள் தொண்டாற்ற யார் இருக்கிறார்கள்? அதற்கேற்ற மனதிடமும் கொள்கைப் பற்றும் குன்றாமல், குறையாமல், குலையாமல் கொண்டோர் யார் இருக்கிறார்கள்? என்று கவலைப்படத் தேவையில்லை, இதோ சாமி, தூத்துக்குடி சாமி, பாண்டி மாநாட்டின் படைத்தளபதி, பாட்டாளிகளின் தோழன், கழகத்தின் காவலன், உண்மை உழைப்பாளர்களின் உற்ற நண்பன், என் தம்பி, என் தம்பி, என்று நான் பெருமையுடன் கூறிக் கூறி, திரு இடமே! உனக்குக் காட்டினேன், அந்தத் திருவிளக்கு அணைந்துவிட்டதே—எண்ணெய் தீர்ந்தா? அல்லவே! அல்லவே! திரி குறைந்தா? அதுவும் இல்லையே! இருளொழிக்கும் இன்ப ஒளி விட்டுக் கொண்டிருக்கும் வேளையில், இதயமற்ற கயவர் சிலர் அந்தத் திருவிளக்கை அணைத்து விட்டனரே......

தூத்துக்குடி சாமி—என்றால் தமிழகம், கேட்ட விநாடியிலேயே ஓர் களிப்பு காட்டுமே—பல ஆண்டுகளாக அந்தக் கொள்கை வீரனின் தொண்டு தழைத்து, மணம் தந்து வருவது கண்டு, மகிழ்ந்து இறுமாந்தல்லவா இருந்து வந்திருக்கிறது. தூத்துக்குடி கே. வி. கே. சாமி என்ற பெயர் உச்சரிக்கப்பட்டதும் எந்த மன்றத்திலும், மாநாட்டிலும், உள்ள மக்கள், நிமிர்ந்து உட்கார்ந்து, கண்களுக்கு ஓர் விருந்து, இதயத்துக்கு ஓர் நம்பிக்கை, நாடு விடுதலை பெற்றுத் தீரும் என்பதற்கோர் அத்தாட்சி இதோ, இதோ, என்று சுட்டிக்காட்டி அல்லவா இன்புறுவர் தத்துவ விளக்கமா செய்வார்? தர்க்கமா பேசுவார்? தழதழத்த குரலா? தட்டுத் தடுமாறும் போக்கா? ஒரு துளியும் கிடையாதே! கழகம் இன்ன திட்டம் தீட்டுகிறது, நான் அந்தக் கட்டளையை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறேன், கடமையை, எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் நிறைவேற்றியே தீருவேன், இது உறுதி என்றல்லவா, தொண்டு உள்ளத்துடன் வீர உள்ளத்துடன் எடுத்துக் கூறுவார். ஆம்! இந்த மாவீரன், செய்து முடிப்பான்! அதற்கான ஆற்றல் இவனிடம் இருக்கிறது! — என்று எவரும் கூறுவரே! அத்தகைய மாவீரனை, தம்பி, இழந்தோமே — நாம் வாழ்கிறோம், வேதனையால் வாட்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம், வன்கணாளர்கள் நமது குலக்கொடியை வேரோடு பறித்தெடுத்து அழித்துவிட்டனரே.

தம்பி, நான் உங்கள் யாவரிடத்திலும், உரிமையுடன் பேசுவேன், சாமியிடம் நான் சொந்தத்துடன் பேசுவேன் — என்னை நன்றாகப் பார்த்தபடியே அவர் இருக்கமாட்டார் — நான் பேசும்போது, அவர் **அப்படியா?** என்று கேட்டதில்லை, ஆகுமா! என்றுகேட்பதில்லை, **ஆகட்டும்** என்பதன்றி பிறிதோர் சொல்லை அவர் எனக்கு அளித்ததில்லையே! அவரிடம் நான், பழகிய ஆண்டுகள் பலப்பல, சுயமரியாதை இயக்ககால முதற்கொண்டு, அவருடன் பழகும் வாய்ப்பு பெற்றிருந்தேன், கடந்த பத்து ஆண்டுகளாக அந்த வாய்ப்பு, எனக்கு, நாம் எடுத்துக்கொண்டுள்ள இலட்சியத்தில் வெற்றி கிடைத்தே தீரும் என்பதற்கான நம்பிக்கையை மிகுதியாக்கிற்று, செயல்படு திட்டம் எது என் எண்ணத்தில் எழும்போதும், அடுத்த விநாடி சாமியின் பெயர் நினைவிற்கு வரும். அப்படிப்பட்ட தம்பி, அந்த ஆற்றல் வீரன். அவனுக்கா இந்தக் கொடுமை!! அந்த மறத்தமிழ் வீரனுக்கா இந்தக் கொடுமை!!

வெட்டினராம், குத்தினராம். பயங்கரமான ஆயுதங்களால், வெறியர்கள்; தனியாக நின்றான்; அவன் கூப்பிடு குரலுக்கு ஓடிவர இலட்சக் கணக்கான மக்கள் உள்ளனர், தமிழகமெங்கும், ஆனால், யாரும் உதவிக்கு வாராததோர் சூழ்நிலையைச் சாதகமாக்கிக்கொண்டு, சண்டாளர்கள், தாக்கினரே, கொன்றனரே, ஐயோ, இக் கொடுமையைக் கேட்கவே நமக்கு வேதனை பிறக்கிறதே—அந்த இரவு அக்ரமக்காரர்கள் தாக்கிய

போது, எதிர்த்துப் போரிட முடியாத நிலையில், சூழநின்று அவரைச் சித்திரவதை செய்த போது, நம் சாமி அந்தோ! என்னென்ன எண்ணினாரோ, ஏதேது நினைத்தாரோ, எப்படி எப்படித் துடித்தாரோ, வெட்டும் குத்தும் அவர் மீது பாயப்பாய, வெறியர்கள் தாக்கத்தாக்க, நம் சாமி இரத்தம், வெள்ளமாகி ஓட, உயிர் ஊசலாட நின்ற நிலையிலும், வீழ்ந்திடும் போதும், ஐயோ! திருஇடமே! தாயகமே! பார்! உன் உண்மைத் தொண்டனை இந்த உலுத்தர்கள் உருக்குலைப்பதைப் பார்! ஊருக்கு உழைப்பவனை இந்தக் கொலைபாதகர்கள் கொன்றுபோடும் கொடுமையைப் பார்! பாட்டாளியின் நண்பனை இந்த மாபாவிகள், பதைக்கப் பதைக்க வெட்டுவதைப் பார்! பார்! தாயகமே! பார்! — என்று எண்ணியிருந்திருப்பார்! என் குரல் கேட்டு ஓடிவர, இலட்சக்கணக்கான வீரர்கள் உள்ளனர்— எனக்காக இன்னுயிரும் தர பாட்டாளிகளின் படைவரிசை அணி அணியாக இதோ தூத்துக்குடியிலிருக்கிறது, எனினும், அவர்கள் எவரும் வர முடியாத நிலையிலே, என்னைக் கொல்கிறார்களே, கொடியவர்கள், என் செய்வேன், என்று அல்லவா குத்தும் வெட்டும் உடலைத்தாக்கி உயிரைக் குடித்திடும்போது எண்ணியிருந்திருப்பார்.

மலைமலையாக நாம் இருக்கிறோம், அணி அணியாக இருக்கிறோம், நாடெங்கும் இருக்கிறோம், நாசகாலர்கள், நமது சாமியைப் படுகொலை செய்துவிட்டனரே! ஏழைகளின் இன்னல் துடைக்க, அவர்தம் உரிமைக்காக அல்லும் பகலும் பாடுபடும் ஆர்வமிக்க தொண்டராயிற்றே, பொதுத் தொண்டிலே, துள்ளும் பிள்ளைப்பருவ முதற்கொண்டு ஈடுபட்டு, எதிர் நீச்சு நடத்தி ஏற்றம் பெற்றவராயிற்றே, எங்கு அநீதி தலைவிரித்தாடினாலும் அக்ரமம் கொக்கரித்தாலும் பாய்ந்து சென்று அதனை எதிர்த்தொழிக்கும் அஞ்சா நெஞ்சனாயிற்றே, என்ற எதனையும் எண்ணிபபார்த்தார் இல்லை அந்தக்கொலைபாதகர்கள். ஐயகோ! அவ்வளவு ஆற்றல் படைத்தவர் என்பதற்காகவே அவரை அடித்துக்கொல்லக் கிளம்பிய கொடியவர்களல்லவா, அந்தக் கொலை பாதகர்கள்

எங்கும் சாமி! எதற்கும் சாமி! எப்போதும் சாமி! எங்கள் சாமி!—என்று நாடே பூரிப்புடன் பெருமிதத்துடன், உவகையுடன், உரிமையுடன், உள்ளன்புடன் கூறிடக்கேட்டதால், கெடுமதியாளர்கள் பொறாமை படமெடுத்தாடும் பாம்பாயினரோ! எங்கள சாமி! எங்கள் சாமி! என்று எண்ணற்ற வீரர்கள், நேருக்கு நேர் நின்று போரிடும் வீரம் காட்டிட எவர் வரினும் அவர்தம்முடன் வீரப் போரிட்டு வெற்றி கொள்ளத்தக்க அடலேறுகள், சொந்தம் கொண்டாடினர், பந்த பாசம் கொண்டிருந்தனர். பாட்டாளிகள், எங்கள் சாமி! எங்கள் சாமி! என்று பரிவுடன் அழைத்தனர். ஆலைத் தொழிலாளரும் உப்பளத் தொழிலாளரும், கல் உடைப்போரும் கட்டை வெட்டுவோரும், எங்கள் சாமி! எமக் குற்றகுறை அறிந்து உருகி, அக்குறை தீரத் துடிதுடித்தெழும் உள்ளம் படைத்த எங்கள் சாமி! என்று பாசம் காட்டினர். பள்ளிச் சிறுவர்களும் ஆசிரியர்களும், எங்கள் சாமி! எங்கள் சாமி! என்று அன்புடன் அழைத்தனர். வணிகர் கோட்டத்திலும், நகராட்சிமன்றத்திலும், எங்கள் சாமி! என்றுதான் உவகையுடன் அழைத்தனர். எங்கள் சாமி! எதற்கும் அஞ்சா நெஞ்சினன்! எந்த இன்னலுக்கும் கலங்காத உள்ளத்தினன்! —என்று நமது கழகம் பெருமையுடன் நாடெங்கும கூறிற்று! ஓங்கி வளர்ந்தது புகழ்! ஒப்பற்ற தொண்டு உயர்ந்தது, உயர்வளித்தது, பலன் தெரிந்தது! இது கண்டு பொறாதார், இது போன்ற ஆற்றல் பெற இயலாதார், பொறாமை கொண்டனர், பொச்சரிப்பு உமிழ்ந்தனர், நச்சரவு ஆயினர், நள்ளிரவிலே, நாட்டுக்குக் கிடைத்த நல்ல புதல்வனை, வெட்டிக் கொன்றனர் — படுகொலை புரிந்தனர்.

அடுத்து வரும் தேர்தலில் எங்கள் சாமி வெற்றிக்கொடி நாட்டப் போகிறார், K. V. K. சாமி திராவிட முன்னேற்றக் கழக நெல்லை மாவட்ட செயலாளர், செயற்குழு உறுப்பினர்; உப்பளத் தொழிலாளர் தலைவர், ஆலைத் தொழிலாளர் தலைவர், இம்மட்டோ, விரைவிலே K. V. K. சாமி M. L. A. ஆகப்போகிறார் என்று கூறிக் குதூகலித்தோம—நமது தேர்தல் வெற்றிபற்றிய பட்டியலை எண்ணும்போதே, முதல் வெற்றி என்று இதனைக் குறித்திருந்தோம் — நமக்குச் செந்தேனாக இனித்த இதே எண்ணம், செந்தேளாயிற்றோ பொறாமை உள்ளம் கொண்டோருக்கு—ஆகா! ஓங்கி வளருகிறான், வளர்ந்த வண்ணம் இருக்கிறான், புகழ் ஓங்குகிறது, ஓங்கியபடி இருக்கிறது, எப்படி இதனைக் கண்டு சகிப்பது என்று எண்ணினரோ அந்த இதயமற்றோர். படுகொலை செய்துவிட்டனரே! பூவும் பிஞ்சும் தோன்றி கனி குலுங்கவேண்டிய பக்குவம பெற்ற பச்சை மரத்தை வெட்டி வீழ்த்தினரே, பாரில் எங்கும் கேள்விப்படமுடியாத பாதகச் செயலன்றோ செய்தனர்.

பாவிகளா! படுபாவிகளா! சாமியை வெட்டினீர்கள், சாமியைமட்டுமா, எமது இதயங்களை எல்லாமல்லவா ஈட்டிகொண்டு குத்திவிட்டீர்கள்—குருதிகொட்டி அந்த வீரன் பிணமானான், இதோ நாங்கள் பல்லாயிரவர், இரத்தக்கண்ணீர் வடித்துக்கொண்டு நடைப்பிணமாகிவிட்டோமே —உமக்கு நாங்கள் இழைத்த கொடுமைதான் என்ன? ஏன்தான் இத்தகைய பயங்கரப் படுகொலை செய்தீர்கள்? சட்டமே! கேள்! சமூகமே! நீதிக்காக வாதாடு! நீதியே, உன் நீண்ட கரத்துக்கு வேலை கொடு! படுகொலை செய்த

**(16-ம் பக்கம் பார்க்க)**






அனைத்தும் கற்பனையே

அரசியல் விளக்க நாடகம்

அத்தனையும் தெளிவளிக்க



## காட்சி 1

இடம்:- திரு. வி. க. திடல் பாதை.

இருப்போர்:-திராவிடர் கழகத் தோழர்
திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்
காங்கிரஸ் ஊழியர் காத்த முத்து.

நேரம்:- வெள்ளிக்கிழமை மாலை 5 மணி.

*

தி. க:- ஏ! கண்ணீர்த் துளி! காமராஜர் மீது பகை கக்கிக் கொண்டிருக்கும் கபோதியே! காமராஜரை நாங்கள் ஆதரிக்கும் காரணத்தை விளக்கி, பெரியார் வெளியிட்ட அறிக்கையைப் பார்த்தாயா?

தி. மு. க:- படித்தேன், நண்பரே, ஆர்வத்துடன் படித்தேன்.

தி. க:- அப்படியா? சரி; படித்த பிறகு?

தி. மு. க:- சிந்தித்தேன்; வாதத் திறமையின் நேர்த்தி கண்டு மகிழ்ந்தேன்.

தி. க:- ஆனால், திருந்தவில்லை...!

தி. மு. க:- அறிக்கை யாரையும் திருத்துவதற்காக எழுதப்பட்டதாகவே எனக்குப் படவில்லை. திருப்திப் படுத்த, எழுதப்பட்டதாகத் தெரிகிறது; திருப்தி பெறவும்

**அண்ணாதுரை**

எழுதி இருக்கிறார் போல் தோன்றுகிறது.

தி. க:- வக்கணை பேசுவாய், வேறென்ன தெரியும் உனக்கு. சரி திருந்தவோ, திருப்திப் படுத்தவோ, எதற்கோ எழுதினார்; கிடக்கட்டும்; அதற்குப் பதில் என்ன சொல்லப் போகிறாய்?

தி. மு. க:- யார்? நானா? காமராஜர் அல்லவா, பதில் சொல்ல வேண்டும் போலிருக்கிறது, அறிக்கையைப் பார்த்தால்.

தி. க:- உன்னோடு பேசுவதும், வீண் கொஞ்ச நஞ்சம், சந்தேகம் கொண்டோருக்கும், அந்த அறிக்கை, தெளிவு தருகிறது. காமராஜரிடம் நாம் ஆதரவு காட்டுவதால், நமக்குத்தான், திராவிடருக்குத்தான் இலாபம், தெளிவாகத் தெரிகிறது.

தி. மு. க:- அறிக்கை அவ்விதம் தான் இருக்கிறது......

தி. க:- காமராஜரிடம் பேசின நமது தோழர்களெல்லாம், பெரியார்.







சொல்கிறபடிதான், பெருமையாக, சந்தோஷத்துடன் சொந்தம் கொண்டாடிக்கொண்டு, புகழ்ச்சியாகச் சொல்கிருர்கள் தெரியுமா?

தி. மு. க:- உனக்கு அந்தப் பாக்யம் கிடைத்ததில்லை போலும்...

தி. க:- இந்தக் கிண்டல் பேச்சு வேண்டாம்... தெரிகிறதா...

தி. மு. க:- சரி, உனக்குக் கோபம் குறையட்டும் — நான் வருகிறேன் — அதோ, காங்கிரஸ் ஊழியர் காத்தமுத்து வருகிருர்.

[காங்கிரஸ் ஊழியர் காத்தமுத்து வருகிருர். புதிய கதர்ச்சட்டை துல்லியமாகத் தெரிகிறது. தி.க., தி. மு. க. இருவரும் ஒன்ருக இருக்கக்கண்டு, இருவருக்கும் வணக்கம் செய்கிருர்.]

தி. க:- காத்தமுத்துவா? வா, வா, என்ன நீ இந்தச் சதிகாரக் கும்பலுடன் கூடிக்கொண்டதாகக் கேள்விப்பட்டேன்...

காத்தமுத்து:- என்னய்யா, துப்பறியும் இலாகா போல இருக்கிறது பேச்சு... என்ன சொல்கிறீர்.

தி. க:- காமராஜர் எதிர்ப்புக் கோஷ்டியின் மகாநாட்டுக்குச் சென்றீராம்.

காத்த:- ஆமாம்...... தவறென்ன? என்ன பேசிக்கொள்கிருர்கள், அவர்கள் வாதம் என்ன? இரு கோஷ்டிகளிலே, காங்கிரசுக்கும், தேசத்துக்கும் நன்மை எதன் மூலம் கிடைக்கும் என்று கண்டறிய வேண்டாமா? அதனுல்...

தி. க:- அதாவது, வேடிக்கை பார்க்க என்பது பொருள்...

காத்த:- வேவு பார்க்க என்றுதான் சொல்லேன்...

தி. க:- எப்படியோ இருக்கட்டும்; காத்தமுத்து! காமராஜர் கவிழ்க்கப்படக் கூடாது-அதுதான் எங்கள் கவலை...

தி. மு. க:- ஏன், காத்தமுத்துவுக்கு மட்டும் வேறு எண்ணமா இருக்கும்!

காத்த:- 'காமராஜ் எதிர்ப்பு' என்று பெயரிடப்பட்டுவிட்டிருக்கிறதல்லவா ஊழியர் மகாநாட்டுக்கு; அதற்கு நான் சென்றதால், நண்பருக்கு அந்தச் சந்தேகம். ஆனால், ஒன்று: நண்பருக்குக் காமராஜ மட்டும்தான் கவிழக்கூடாது; எங்கள் நோக்கம், காங்கிரசும் கவிழக்கூடாது என்பது.

தி. க:- அதுபற்றி இப்போது பேசுவானேன். காமராஜ் சம்பந்தப்பட்ட மட்டில், நாம் ஒன்று, சரிதானே...

காத்த:- காமராஜர் பற்றி, அவரோடு 'வாழ்விலும் தாழ்விலும்' ஒன்ருக இருந்து வந்துள்ள எங்களுக்குத் தெரிவதைவிட அதிகமாகவே நண்பருக்குத் தெரியும் போலிருக்கிறது...

தி. மு. க:- ஏன், அவ்விதம் இருக்கக் கூடாது. மேலும், காமராஜர் ஏன், புதிய கருத்துள்ளவராகி இருக்கக்கூடாது...

தி. க:- சொல்லு, சொல்லு,

காத்த:- நீங்கள், தீனமூனகானா தானே.

தி. க:- கண்ணீர்த் துளிதான்! என்ருலும், நாங்கள் புட்டுப் புட்டுச் சொன்ன பிறகு, காமராஜர் நல்லவர் நம்மவர் என்பதை உணர்ந்து கொண்டு வருகிருர்...

காத்த:- நம்மவர்!........... அதென்னய்யா, நம்மவர்... எந்த அர்த்தத்தில், சொல்கிறீர்.

தி. மு. க:- ஏன்! திராவிடர் என்ற பொருளில்தான் சொல்கிருர்!

காத்த:- நீங்களாக ஒரு முடிவு செய்துகொள்கிறீர்கள்...

தி. மு. க:- இல்லையே! என் நண்பர், பழகிப் பார்த்துத்தான், காமராஜர் 'நம்மவர்' என்ற முடிவுக்கு வந்திருக்கிருர்; என்னைக்கூடத் திருத்தப் பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கிருர்...

தி. க:- நிச்சயமாக, விரைவில் திருந்திவிடுவாய்......காமராஜருக்கும் திராவிடர் கழகத்துக்கும் உள்ள 'நேசம்' நியாயமானது என்பதை இப்போதே ஓரளவுக்கு உணர்ந்து கொண்டுதான் இருப்பாய்...

தி. மு. க:- அறிக்கையாலே, என்கிருயா?

காத்த:- என்ன அறிக்கை...?

தி. க:- இந்தப் பயல்களுக்கு விளக்கம் தருவதற்காகப் பெரியார் ......வெளியிட்டிருக்கிருர்...... படிக்கவில்லையா...

காத்த:- என்ன எழுதியிருக்கிருர்?

[காத்தமுத்துவிடம் அறிக்கை தரப்படுகிறது.

படிக்கும்போது முகம் சில இடங்களில் சுளிக்கிறது.

காத்தமுத்து முகம் சுளிக்கும்போது தி. மு. க; தி. க. வைக் கவனிக்கிருர்.

தி. க. சிறிது கோபமடைகிருர்; சமாளித்துக் கொள்கிருர்.

காத்தமுத்து, பத்திரிகையை தி. க.விடம் கொடுக்கிருர்.]

தி. க:- எப்படி, விளக்கம்...

காத்த:- உங்களுக்குத் தந்திருக்கிருர்.

தி. க:- இதைப் பார்த்த பிறகுதான் இந்த கண்ணீர்த் துளிக்கு இலேசாக மனம் மாறி வருகிறது...

காத்த:- எனக்கே, கொஞ்சம் மனம் மாறி வருகிறது...

தி. க:- பலே! பலே! வெற்றி, வெற்றி...

தி. மு. க:- காத்தமுத்து இனி கழகம் தான்......ஏன், அப்படித்தானே.

காத்த:- ஏனப்பா, வீணுக, துரும்பைத் தூணுக்கிப் பேசுகிறீர்கள்? இந்த அறிக்கை, எனக்குக் குழப்பத்தைத்தான் தருகிறது...காமராஜர் யார், எப்படிப்பட்டவர் என்பதே இப்போது புரியமாட்டேனென்கிறது...

தி. மு. க:- உனக்குக்கூடவா? எனக்கும் அதே சங்கடம்தான் ...ஆனல் என் நண்பர், தி. க. வுக்கு நன்ருகப்புரிகிறது......

காத்த:- உங்களுக்கு, அவர் போக்குத் தெரியாது; ஆமாம், தெரிந்துகொள்ளவும் முடியாது...

தி. மு. க:- காமராஜர், எங்களை ஏமாற்றுகிறார், என்கிறீரா?

காத்த:- இல்லையானால், எங்களை ஏமாற்றுவாரா?

தி. மு. க:- அதுவும் இல்லை, நம் எல்லோரையும் ஒன்றாக்கு கிறார், என்று எண்ணிக் கொள்ளக்கூடாதா?

தி. க:- அதேதான்...அதுதான்.

காத்த:- அது எப்படிச்சாத்தியம்? நீங்கள், திராவிடநாடு, விட்டு விட்டீர்களா...நேரு ஆட்சியை ஏற்கிறீர்களா.......காங்கிரஸ் மகாசபையை எதிர்க்காம லிருக்கிறீர்களா...

தி. மு. க:- சரி, சரி.........ஏதேது, கதர் கட்டுவீர்களா, இந்தி படிப்பீர்களா, என்று அடுக்கு வார் போலிருக்கிறதே, காத்த முத்து...

தி. க:- அவருடைய ஆசை அது; நம்முடைய கொள்கையை நாம் எப்படி விட்டுவிடுவோம்?

காத்த:- உங்கள் கொள்கை காம ராஜரை ஆதரிப்பது அல் லவா...

தி. க:- ஆமாம்

காத்த:- அப்படியானால் காமராஜர் எந்தெந்தக் கொள்கைக்குக் கட்டுப்பட்டவரோ, எந்தெந் தக் கொள்கையால் அவர் வளர்க்கப்பட்டாரோ, உரு வாக்கப்பட்டாரோ, அவை களுக்கு நீங்கள் அழிவு தேட லாமா...

தி. மு. க:- நியாயமான வாதம்...

தி. க:- வாதமா அது, பிடிவாதம் ...

காத்த:- காமராஜர் வேண்டும், அவர் கொள்கைகள் வேண் டாம் என்பது என்ன வாதமோ! விசித்திர வாதம் ...

தி. மு. க:- இதிலென்ன விசித் திரம்? முட்டையை உடைப் பது முட்டை அடை செய் வதற்குத்தானே...அதுபோல இது ஒருமுறை......காமராஜ ருடன் உறவாடுவது, காங் கிரசை அழிக்க; ஏன், நண் பரே! அப்படித்தானே...

காத்த:- அதுதான் எங்கள் சந் தேகம்...

தி. க:- பார்த்தாயா, உன் வேலையைக் காட்டிவிட்டாயே ...எங்களுக்குள் எரிச்சல் உண்டாக்கி வைக்கிறாயே...

தி. மு. க:- ஐயயோ! அப்படிச் சொல்லிவிடாதே நண்பா... நான் விவரம் தெரியாமல், தவறாக வாதம் செய்துவிட் டேன் போலிருக்கிறது...

காத்த:- என்னமோ, என் குழப் பம் வளருகிறது; நான் அவ ரிடமே போய்த் தெளிவுபெறப் போகிறேன்.

தி. மு. க:- பெரியாரிடமா...

காத்த:- காமராஜிடம்...

(காத்தமுத்து விடைபெற் றுக்கொண்டு சென்றான பிறகு)

தி. மு. க:- ஆமாம், இந்தக் காத்த முத்துப் போனறவர்களிடம் எல்லாம், காமராஜர் தாராள மாகவா பேசுவார்? என்ன பேசுவார்கள்?

தி. க:- என்ன பேசும், இதுகளெல் லாம்...ஏதாவது உதவி கேட் கும்...இவ்வளவு என்ன...... நாளைக்கு வீட்டுக்கு வாயேன், காத்தமுத்து என்னென்ன பேசினான் என்பதை ஒரு எழுத்து விடாமல், நான் சொல்கிறேன்.

தி. மு. க:- அது எப்படி? காத்த முத்து வந்து சொல்வானா?

தி. க:- அவனைக் கேட்டால் உண் மையைத் தெரிந்துகொள்ள முடியுமா...காமராஜர் ஆபீஸ் 'ப்யூன்' என் பக்கத்து வீடு தானே......சேதி பூராவும் சொல்லுவான். பெரியார் என்றால் உயிர் அந்த ஆசா மிக்கு.....ஒரு கூட்டம் தவற மாட்டான்......

## காட்சி 2

இடம்:- ஒரு மாளிகை உட்புறம்.

இருப்போர்:-காமராஜர், அவர் நண் பர், காங்கிரஸ் ஊழியர் காத்தமுத்து.

நேரம்:- வெள்ளிக்கிழமை மாலை 6 மணி.

காமராஜர்:- வரச்சொல்லு! வரச் சொல்லு! அடா, அடா! பொழுதுபோனால் பொழுது விடிந்தால், பெரிய தொல்லை யாகிவிட்டது, வந்து என்ன பேசவேணுமோ, அதைச் சொல்லிவிட்டுப் போகச் சொல்லு.

நண்பர்:- முகத்தை இப்படிச் 'சிடு சிடு' என்று வைத்துக்கொண் டிருந்தால், வருகிறவருக்கு எப்படி இருக்கும்? ஏன், உங்க ளுக்கு, வரவர, இவ்வளவு கோபம் வருகிறது......

காம:- நீ வேறே, தத்துவம் பேச ஆரம்பித்து விடாதே... வரச் சொல்லு... முகத்தை என்ன பவுடர் போட்டுப் பளபளப்பு ஆக்கிக்கொள்ளணுமா...... போய்யா, போயி...

நண்:- இதோ, அவரே, வந்துவிட் டார்.

காம:- வாய்யா! வா, வா! என்ன விசேஷம்? போன மாதம்கூட வந்தயாமே... நேரம் இல்லை, பார்க்க... கடிதம் போட்டதா கக் கக்கன் சொன்னார்..... திருச்சியிலே இருந்து வருகி றாப் போலே இருக்கு...

காங்கிரஸ் ஊழியர்:- ஆமாம்...... போயிருந்தேன்...... சும்மா, பார்க்க, என்ன பேசுகிறாங் கன்னு கேட்க...

காம:- அதுசரி, அதுசரி... இது போல வேடிக்கை பார்க்க, பொழுதுபோக்க நீங்களெல் லாம் போறிங்க...... அந்த ஆசாமிக, இதெல்லாம் ஆதர வுன்னு எண்ணிக்கொண்டு தப்புக் கணக்குப் போடுகிறா னுங்க... சரி... என்ன ஒரே வீராவேசமான பேச்சுத்தானா ......

ஊழி:- பேசினானுங்க... கோபம் மட் டும்தான் என்று சொல்லிவிடு வதற்கில்லை, வருத்தமும் இருக்கு...

காம:- இருக்கும், யார் இல்லை என் கிறா; எல்லோரையும் சந்தோ ஷப்படுத்த முடியுமா... முடி யல்லே...... கேட்டதைக் கொடுக்காவிட்டா, எள்ளும் கொள்ளும் வெடிக்குது.

ஊழி:- தப்பாவே, எடுத்துக்கொள் றீங்களே... ஏதாவது கேட்டுப் பெறுவதுன்னு, உங்களோடு சினேகமா இருந்தா கிடைக் காதா? பத்துக்கேட்டா, ஒண்ணுவது கிடைக்குமே... விரோதித்துக்கொண்டு, என்ன இலாபம்...?

காம:- வேறே என்னய்யா இப்ப இவங்களுக்குக் கவலே வந்து குத்துது சொல்லு, கேட் போம். நான் படாத பாடுபட்டு பக்குவமாப், பேசி, உள்ளத் துக்கு உள்ளே இருப்பதை வெளியே தெரிய ஒட்டாத படி சாமர்த்தியம் காட்டி, ஒரு பெரிய தொல்லேயை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கிறேன்... இந்தத் தேர்தல் நேரத்திலே இது எப்படிப்பட்ட இலாபகர மான காரியம்...ஒரு பெரிய பட்டாளமே, இப்ப, நம்மோட வம்புதும்புக்கு வாராமே, வாழ்த்தி வரவேத்துகிட்டு இருக்குது......இலேசான ஆசாமிகளா, நெருஞ்சி முள்ளு மாதிரி, சதா சுருக்குச் சுருக்குன்னு குத்திகிட்டே இருக்கும்...அப்படிப்பட்ட ஆசாமிக, இப்ப, எவ்வளவு அன்பா, நேசமா இருக்கறுங்க ...இந்தக் காரியத்திலே, இப் படிப்பட்ட 'ஜெயம்' இடைக் கும்னு நானே, எதிர்பார்க்க வில்லே. எப்படியோ நம்மோட 'ஜாதக பலன்' என்றுதான் சொல்லோணும், வெற்றி கிடைச்சுது...பெரிய தொல்லே விட்டுதுன்னு நம்ம ஆளுங்க மத்தக் காரியத்தைக் கவனிக் காமபடிக்கு.....அவங்களோட சவகாசம் எதுக்கு? என்று கேட்டு, கொட்டிகிட்டே இருந்தா, எனக்குச் சங்கடமா இராதா...?

ஊழி:- நாங்க சொல்கிறபடிதான் காமராஜர் நடக்கிருர், எங்க ளோட ஆள் ஆயிட்டார்— நாங்கதான் இப்ப ராஜ்யமே ஆளுகிறோம் என்றெல்லாம், அவங்க பேசறது கேட்டா, நம்ம ஆளுங்களுக்குச் சங் கடமா இராதா...?

காம:- புத்தி எங்கேய்யா போச் சுது.., நம்ம ஆளுங்க, கவனிச் சுப் பார்க்கவேணுமா...? எந் தக் காரியத்திலே, நான் விட் டுக் கொடுக்கறேன், எந்தக் கொள்கையிலே வளேயறேன், சொல்லுகேட்பம்இந்தியான்னு வேண்டாம், திராவிடம் வேணும்னு ஏதாச்சும் பேச றனு... நேத்துகூட, தனிநாடு கேட்கறது பைத்யக்காரத் தனம்னு நான் பேசி இருக்க றேன்...

ஊழி:- ஆமாமாம், நாங்கூட பேசிக்கொண்டோம். இதைப் படிச்சா அவரு உங்களேத் தாக்குவாருன்னு கூட எண் ணிக் கொண்டோம்...

காம:- போய்யா, அதுக்கு அவ ருக்கு நேரமே கிடையாதபடி நான் செஞ்சுவைத்திருக்க றேன்... திராவிட நாடு கேட்க றது என்னோட கடமை — அது கூடாது என்கிறது காம ராஜரோட கடமைன்னு, அவர் பேசருரு, எழுதருரு... இன் னும் என்னய்யா வேணும்... திராவிட நாடாவது வெங்காய நாடாவதுன்னு கூட அவர் வாயாலேயே வந்திருக்குது தெரியுமேல்லோ...

ஊழி:- அதெல்லாம் படிக்கிற போது சந்தோஷமாகத்தான் இருக்குது... ஆனு, இராமனே கொளுத்தறது...

காம:- கொளுத்தறபோது, நானென்ன சிவகாசி வத்தி பெட்டி குரோஸ் குரோசா வாங்கிக் கொடுத்தனு? கொளுத்தவே விடலே...... தெரியுமா... இராஜகோபா லாச்சாரி இருந்தபோதாவது, பிள்ளேயாரை, தெருத் தெரு வாப் போட்டு உடைச்சாங்க ... இராமர் படம் கொளுத் தினு, ஜெயில்தான்னு சொன் னேன்... துணிச்சலா... அது அவரோட கடமை அதுக்காக அவர் பேரிலே கோபம் கொள் ளாதிங்கன்னு அவர், அவ ரோட ஆளுகளுக்குச் சமா தானம் சொன்னுரு... அவ் வளவு பக்குவமாக நிலேமை இருக்குது...

ஊழி:- உத்யோக விஷயத்திலே எல்லாம்...

காம:- என்ன...? என்னய்யா குடி முழுகிப்போச்சி...? எல்லாம் அவங்க கட்சி ஆளுகளுக்குத் தூக்கி கொடுத்துவிட்டமா...?

ஊழி:- அப்படிச் செய்யல்லேன்னு லும் எங்க ஆளுக! எங்க ஆளுகன்னு அவங்கச் சொல்லிக் கொள்ருங்க...

காம:- அது அவங்க இஷ்டம்... உனக்கென்ன நஷ்டம், சொல்லு... இதோ பாருய்யா ஒரு வேடிக்கை... இவரு இருக்காரே, இராஜரத்தினம் ...

ஊழி:- ஆமா, போலீஸ் ஐ. ஜி....

காம:- அவர்தான்... அவர் ஐ. ஜி. ஆன உடனே, என்ன பேசிக் கொண்டாங்க...?

ஊழி:- எங்க ஆசாமின்னு, அவங்க பேசிக்கொண்டாங்க...

காம:- நவாப் ராஜமாணிக்கம் கம் பெனி தெரியுமாய்யா, டிராமா கம்பெனி...

ஊழி:- தெரியுமே... சம்பூர்ண இராமாயணம் நடத்தினுங்க...

காம:- அந்த டிராமாவிலே, இந்த ஐ. ஜி. தலைமை வகித்தார்— என்ன பேசினுரு தெரியுமா... தெய்வானுகூலம் — தெய்வீக சக்தின்னு ஏதுவும் கிடையா துன்னு சில பைத்யக்காரர்கள் பேசருங்க. அது சுத்த தப்பு. எனக்கு ஐ. ஜி. வேலே கிடைச் சது கூட தெய்வானுகூலத் தாலேதான்னு, பேசினுரு— தெரியுமா...

ஊழி:- அப்படியா... அடே... அவரா...?

காம:- ஆமா! பேப்பரிலே பார்க் கலேயா? இப்ப, சொல்லய்யா, அவர் எங்க 'ஆளு'ன்னு அவங்கப் பேசிக்கொள்ற திலே, அர்த்தம் ஏதாச்சும் இருக்கா...

ஊழி:- ஆமா... எப்படிச் சொந்தம் கொண்டாட முடியும்...?

காம:- கல்வி இலாகாவிலே, சுந்தர வடிவேலு இருக்காரேல்லோ ....

ஊழி:- ஆமாம்... அவரு முழுக்க முழுக்க அவங்க ஆளாம்...

காம:- யாரு சொல்றது? அவங்க தானே.....! பைத்யக்காரத்

தனமா, நீயும் நம்பறயா? இதோ பாரய்யா, இராஜகோபாலாச்சாரி ஆட்சியின போது, இந்த ஆசாமி, கல்வி இலாகாவிலேதான் பெரிய வேலையிலே இருந்தாரு...... அப்ப கல்வித் திட்டம் வந்துதேல்லோ...

**ஊழி:-** நாமெல்லாம்கூட எதிர்த்தமே...

**காம:-** ஆம்ரய்யா...பெரியார் கட்சியும் பலமாகத்தானே எதிர்த்துது...மறியல் நடத்தல்லே...

**ஊழி:-** ஆமாம்...அடே அப்பா, ஊரையே ஒரு கலக்கு கலக்கி விட்டாங்களே...

**காம:-** கலக்கினுங்களேல்லோ...... அப்ப, இதே சுந்தரவடிவேலுதான், ஊருருக்குப் போயி ஆச்சாரியாரோட கல்வித் திட்டம் சிலாக்யமானது, அதை எதிர்க்கிறவங்க விவரம் தெரியாதவங்கன்னு பேசினவரு,....தெரிஞ்சுக்கோ ...

**ஊழி:-** இவரா...ஆச்சாரியாரையா ஆதரிச்சாரு...

**காம:-** ஆதரிக்காமே, என்ன பண்ணுவாரு? என்யா, உத்யோகஸ்தரையெல்லாம், உன் ஆளு என் ஆளுன்னு கட்சிகள் பேசிக் கொள்ளலாமே தவிர, அவங்க எப்பவும் 'எஜமான் சொல்படி'தானே...

**ஊழி:-** அப்படித்தான் இருக்குது ...

**காம:-** இப்படிப்பட்டவங்களுக்கு உத்யோகம் கொடுத்துவிட்டதிலே, நமக்கென்னய்யா நஷ்டம்...அதனாலே என்ன முறை, தலைகீழாக மாறிப் போச்சு? என்ன திட்டம் வந்து நம்மைக் குத்துது, குடையுது......பெரியவரு, என்னை தற்குறி, தன்மானமத்தவன், கங்காணி, அப்படி இப்படின்னு ஏசிப்பேசி வந்தாரு......இப்ப, தமிழ் மகன், தடியாலே அடிச்சாலும், ஜெயிலிலே போட்டாலும், நான் அவர் பேரிலே கோபம் கொள்ளவே மாட்டேன். அது அவரோட கடமை... என்றல்லவா, பேசறாரு...பார்க்கறயேல்லோ அவங்க பேப்பர்லே ...

**ஊழி:-** ஆமாமாம்......நம்ம பத்திரிகைகள் போட மறந்துட்டாகூட, இப்ப நம்ம சேதியை அவங்கதான் வெளியிடறுங்க ... ஒண்ணுயிடணும்னு கூட யாரோ, அவங்க ஆசாமி பேசினுருன்னு, பார்த்தேன்...

**காம:-** ஆமாமாம்.....இரண்டொரு உதயோகம்,....இதனாலே, நமக்கு, கட்சி என்கிற முறையிலே, எவ்வளவு பெரிய இலாபம்னு கவனிச்சயா...எத்தனை விதமான இலாபம்...

**ஊழி:-** ஓட்டு, நமக்குத்தான் போடணும்னு...

**காம:-** அடிச்சிப் பேசருங்கய்யா... இன்னும், நாம, எலக்ஷன் பிரசாரகூட்டம் போடவே இல்லை; நம்ம வேலையை அவங்க ஆரம்பச்சி 'ஜரூரா' செய்துகிட்டு, வாராங்க, ஊருரா...

**ஊழி:-** காங்கிரசுன்னு, வேப்பங்காயா இருக்கும்...எரிஞ்சு எரிஞ்சு விழுவாங்க, அவங்க ...

**காம:-** ஆகுமா...அது முன்னே!... இப்ப, எனக்காக எல்லாம்... சரியாகுது...கசப்பு மருந்து தேனிலே குழைச்சி சாப்பிடுவது இல்லையா...அது போலன்னு வைச்சிக்கய்யே... 'ஓட்டு' வாங்கித்தர, அவங்களோட தயவை, நான் ஒண்ணும் கேட்கல்லே...தானுவருகிற சீதேவியை வேணும்னு சொல்றதா? கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுகிட்டு வந்து கொடுக்கும் என்பாங்களே, அதுபோல! இதைத்தானே, இராஜதந்திரம்னு சொல்லணும்...

**ஊழி:-** ஆமா, பெரியவரோட கட்சி ஆசாமிக, இதை எல்லாம் அலசிப் பார்க்கமாட்டாங்களா

**காம:-** நேரம் ஏது? ஏன்யா, அவரு என்ன சாமான்யப்பட்டவரா ...காமராஜர் சங்கதி கிடக்கட்டும், இராமன் சமாசாரத்தைப் பார்க்கலாம் வாங்கன்னு அழைச்சிகிட்டுப் போயிட்டாரே...இப்ப, அவங்களோட கவனம், மெட்ராசிலேயா இருக்குது...அயோத்தியா பட்டணம் போயாச்சி...

**ஊழி:-** ஒருவிதத்திலே, அது நமக்குச் சௌகரியமாப் போச்சு...

**காம:-** ஒருவிதத்திலேயா......நீங்க இதைஎல்லாம் சரியா, அலசி ஆராய்ந்து பார்க்கறது இடையாது.........பெரியவரு, இப்ப இராமர்–சீதைபத்திப் பேசறதும் எழுதறதும், கிளர்ச்சி செய்யறதும் பார்த்தா, அவங்க ரெண்டு பேரும் இப்ப, எதிரே இருந்துகொண்டு இருப்பதுபோல தெரியுதேல்லோ...அவ்வளவு தீவிரமாத்தானே எதிர்க்கிருரு...

**ஊழி:-** ஆமாம்......அது தவிர, வேறே பிரச்சினையே இடையாதுன்னு நினைக்கிறமாதிரித்தான் தோணுது.

**காம:-** அப்பேற்பட்ட எதிர்ப்புச் சக்தியைக் கிளப்பி, ஓயாம ஒழிச்சலில்லாமெ பாடுபட்டு, படை திரட்டி கிளர்ச்சி செய்யக்கூடியவர்னு தெரியுதேல்லோ...

**ஊழி:-** ஆமாமாம்...அது எல்லோருக்கும் தெரிஞ்சதுதானே...

**காம:-** அப்படிப்பட்டசக்தியை இப்ப என்னோட சிநேகிதம்மட்டும் இல்லேன்னு, ஆட்சியின் பேரிலேதானே ஏவி இருப்பாரு...திக்குமுக்காடிப் போயிருக்கணுமே......அந்தத் தொல்லையைச் சமாளிக்கிறது தவிர வேறே ஒரு வேலைக்கும் நேரம் கிடைக்காதே...ஏன்யா மிரட்டறேன்னு நினைக்கறியா ...நான் சொல்றது சரியா இல்லையான்னு நீயே, யோசிச்சுப்பாரு, புரியும்...தேவிகுளம் பீர்மேடு விஷயமிருக்கே, எப்பேற்பட்ட தலைவலி...

**ஊழி:-** பெரிய தலைவலிதான்...... இன்னும் தீரலிங்களே...

**காம:-** மலைமலையா ஆதாரமிருக்குது, தேவிகுளம் இதெல்லாம் தமிழனுடையதுதான் என்பதற்கு......கிடைத்தாகணும், நியாயப்படி பார்த்தா... ஊரே திரண்டுது.....எல்லாக்

கட்சிக்காரனும் 'ஒண்ணு'கூடி கிட்டானுங்க...

ஊழி:- ஆமா, பெரியவருகூட கார சாரமா எழுதிஞரு...

காம: எப்படி எழுதாமே இருக்க லாம்? நாமேகூடத்தானே பேசி ஞேம். சட்டசபையிலே தீர் மானம் போட்டோம்...

ஊழி:- டில்லியிலே, நம்ம மனு வைத் தள்ளிவிட்டாங்க...

காம:- ஏன்யா, பூசி மெழுகறே... நம்மோட மூக்கை அறுத்து முகத்திலே கரியைப் பூசி அனுப்பிவிட்டாங்க....பெரிய வருமட்டும், என்னுேட சிநே கிதமா இல்லாமெ இருந்தா தூள் பறந்திருக்குமே, துரோகி ஒழிக! வடநாட்டுக் கூலி ஒழிக! கங்காணி ஒழிக; மானங்கெட்ட மந்திரிசபை மண்ணுய்ப்போக!.......என்று நாள் தவருமல், போடுபோடு ன்னு போட்டபடி அல்லவா இருந்திருப்பாரு, சும்மாவா விட்டுவைப்பாரு, எத்தனே கண்டன நாள் — எவ்வளவு கிளர்ச்சி—மறியலு—வ, அப்பா! ஊர் அமளிகுமளியாயிருக்குமே ...இராமர் படமா எரிச்சிகிட்டு இருப்பாரு.......போட்டுக் கொளுத்து நேரு படத்தை என்பாரே...

ஊழி:- செய்திருப்பாரு...ஆமா...

காம:- தடியடி, துப்பாக்கி,ஜெயிலு எல்லா ரகளேயும், இங்கே, பம்பாய் மாதிரித்தானே நடந் திருக்கும்...?

ஊழி:- உண்மைதான்.........ஊரே நாறிப்போயிருக்கும்...

காம;- இப்போ? கப்சிப்! எவனு வது, மத்தக் கட்சிக்காரனுக, தேவிகுளம் பீர்மேடுன்னு பேசினு, இப்ப, நான்கூடப் பதில் சொல்லத் தேவை கிடையாது, அவரே, சரிதான் வாயை மூடுங்கடா...தேவியும் குளமும்...மானங்கெட்டசீதை யையும் மரியாதை கெட்ட இராமனேயும் கொளுத்திச் சாம்பலாக்காமெ, அந்த ஊரு வேணும் இந்த ஊரு வேணும்னு, வம்பு பேசறிங் களே, ஈனப்பிறவிகளே! இழி ஜாதி மக்களே! — அப்படி இப்படின்னு தாக்குதாக் குன்னு தாக்கருரு......வடக் கெல்லேயிலே, நமக்கு நியாயம் இடைக்கல்லே, வாயைத் திறக்கருரா, பார்த்தயா? தேவிகுளம் பீர்மேடு, எப்படி யும் தமிழனுக்குத்தான், கூச் சல் போடாதிங்க, கிளர்ச்சி செய்யாதிங்க, நாங்களே வாங் கிக் கொடுக்கரோம்னு, நாம, காங்கிரஸ் கூட்டத்திலேயும் சொன்னேம், சட்டசபையி லும் பேசினேம் — நேரு நம் மோட மூக்கை அறுத்துவிட் டாரு...இப்ப எங்க ரெண்டு பேருக்கும் இருக்கற சிநே கிதம் இல்லேன்னு, வெளுத்து வாங்கி இருப்பாரே பெரிய வரு, சும்மாவாவிட்டு வைப் பாரு! மந்திரி சபை ஒழிப்பு நாள் போட்டிருப்பாரு! இப்ப பார்த்தயா? சூர்ப்பனகை யோட மூக்கை இராமன் அறுத்தது பேடிச் செயல், இதை எந்த யோக்யன் கேட் டான் என்று பேசி வாராரு... நாம, தப்பிச்சிக்கிட்டோம்...

ஊழி:- அந்த வகையிலே பார்க்கற போது, நீங்க அதிர்ஷ்ட சாலின்னுதான் சொல்லோ ணும்...

காம:- 'நாம்'ன்னு சேர்த்துச்சொல் லய்யா...நம்ம கட்சிக்கே அதிர்ஷ்டம்னு சொல்லு. ஒண்ணு கேட்கறேன், சொல்லு, சென்னைராஜ்யம்னு தான் பேர் இருக்கோணும் தமிழ்நாடுன்னு பேர் இட முடியாது என்று சொல்லி விட்டு, என்னைத் தவிர வேறு எவனுலாவது நிம்மதியா இருக்கமுடியுமா? சும்மா விட்டுவைப்பாரா பெரியவரு! அட, மானங்கெட்டவனே! உன்னைப்போயி, நான் பச் சைத் தமிழன், தமிழ் மகன், தன்மானத் தமிழன் என் றெல்லாம் தூக்கிவைச்சி வைச்சிப் பேசினேனே! தமிழ் நாடுன்னு "பேர்வைக்கக் கூடவா உனக்கு மனம்இல்லே, தமிழன் தானு நீ! மானரோஷம் எல்லாம் வித்துப் போட்டு, நீ, மந்திரியா இருக்கலாம்... நான் எப்படி அதைப்பார்த்து கிட்டுச் சும்மா இருக்கமுடி யும்...ஆகவே இரண்டிலே ஒண்ணு பார்த்துவிடறேன் ...என்று 'போர்' ஆரம்பிச்சி விட்டிருப்பாரேல்லோ...

ஊழி:- ஆமாம்... தமிழ் நாடு என் கிற பெயருக்காக 'போர்' நடத் தப் போவதாகக்கூடச் சொன்னதாகக் கவனம்...

காம:- சொன்னரய்யா, சொன்னர். பிறகு, பார்த்தார், நான் தமிழ் நாடு கிடையாதுன்னுசொல்லி விட்டேனு, என்னடா செய்ய றது, இந்த மாதிரி இல்லமை ...ஆயிப்போச்சேன்னு, யோசனே செய்தாரு. செய்து, பிடி இரா மனே! என்று அவரோட ஆசாமிகளுக்கு வேறே வேலே கொடுத்துவிட்டாரு...

ஊழி:- சாமர்த்தியசாலி தாங்க...

காம:- யாரு? அவருமட்டுந்தானு? ஏன்யா, அவர் மூலமாகக் காங்கிரசுக்கு வரக்கூடிய ஆபத்தை வரவிடாமப்படிக் குத் தடுத்த என்னேட சாமர்த்தியத்தைக் கொஞ்சம் கூடப் பாராட்டமாட்டே போலிருக்குது...

ஊழி;- செச்சே! அப்படி இல்லிங்க ... நீங்க, முன்னே எல்லாம் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு இருப்பிங்களே, இப்ப, என்னமோ குழைய றதும் கொஞ்சறதுமா இருக் கவே...

காம:- குழையறதாலே, இலாபம் இருக்கா இல்லேயான்னு பாரு. பம்பாயிலே இவ்வளவு ரகளே நடந்தது — பஞ்சாபிலே — குஜராத்திலே—அசாமிலே— ஒரிசாவிலே — எங்கே பார்த் தாலும் ரகளேயோ ரகளேன்னு நடந்தது — துப்பாக்கிப் பிர யோகம் நாள் தவருமல் நடந் தது... கொலே! படுகொலே! சித்திரவதை! காங்கிரஸ் கொடுங்கோலாட்சி!—என்று இன்னேரம் இதற்காக, பெரிய வரு சூருவளிபோல அல்லவா பிரசாரம் செய்து, காங்கிர சோட மானத்தை வாங்கி விட்டிருப்பாரு—கொலேபாதக ஆட்சித் தலைவர் வருகிருர்,

அவர் முகத்திலே காரித் துப்புங்கள்—என்று இராஜேந்திர பிரசாத் வந்தபோது இயக்கமே நடத்தி இருப்பாரே! நீயும் பார்க்கறயே, நாள் தவருமல் பேசுகிருரே, ஒரு வார்த்தை, கண்டனம், பேசுகிருரா? பேசமாட்டார்! எனக்குச் சங்கடமாக இருக்குமே என்கிற எண்ணத்திலே தான். இல்லேயானுல், 'நேரு ஒழிக' கிளர்ச்சிதான் நடக்கும்.

ஊழி:- ஆமாம்... அதைக் குறித்தெல்லாம் பேசுவது என்ருல் அவருக்கு இஷ்டமாச்சே...

காம:- இஷ்டம்னு மெதுவாச் சொல்றியே... அக்காரவடிசல் சாப்பிடுவது போலன்னு சொல்லு... காங்கிரஸ்காரர்களே காங்கிரஸ் ஆட்சியை வெறுப்பார்கள் அப்படியல்லவா, புட்டுப் புட்டுச் சொல்லீ வ்ருவாரு, பார்க்கறியே, அவர் சிதையைப் பத்தி எடுத்துச்சொல்லி வருவதைக் கேட்டா, சிதைக்கே சந்தேகம் வந்து விடுமே, அப்படி இருக்கெல்லோ. அப்படிப் பட்டவரு, காங்கிரஸ் ஆட்சியிலே, இரத்தம் ஆருக ஓடுது, பிணம் மலேமலேயாக் குவியுதுன்னு, எடுத்துச் சொல்லியிருந்தா, அம்மாடி! அல்லோல கல்லோலமாகி இருக்குமே, ஒருபேச்சுஉண்டா! அதுதான் போகட்டும். சிலோனிலே தமிழர்களேச் சுட்டுத் தள்ளின சேதி வந்ததே-எங்க ரெண்டு பேருக்கும் சினேகம்இல்லாமெ போயிருந்தா — இன்னேரம், காங்கிரஸ் சர்க்காரைப் படாத பாடுபடுத்தியிருக்கமாட்டாரா? கப்சிப்! ஒண்ணும் பேசல்லே, பார்த்தயேல்லோ! இந்த 'விசைத் தறி' சமாசாரம் ஒண்ணு போதுமே அவருக்கு காங்கிரஸ் சர்க்காரை கண்ட துண்டமாக்காமல் இனி நான் வீட்டுக்குள்ளேகாலடிஎடுத்து வைக்கமாட்டேன் என்று கடும் சபதமல்லவா, எடுத்துக் கொண்டிருப்பாரு

ஊழி:- ஆமாம்...அதெல்லாம் ஒரு துளி சங்கடமும் தருவதில்லே, எதெதற்குஅவர்பெரியபெரிய கிளர்ச்சி செய்யக்கூடியவர்னு, நாடு எதிர்பார்க்குமோ, அதிலே அவர் தலேயிடவே காணும்

காம:- அதுமட்டும் இல்லே... அவர் தலேயிட்டு, கிளர்ச்சி செய்யாதது மட்டுமல்ல, மத்த கட்சிக்காரனுங்க ஏதாச்சும் மூச்சுப் பேச்சுன்ருலும், இவரே அவர்களே எதிர்த்து, மூலேயிலே உட்காரச்செய்துவிட்டு, எனக்குச் 'சேதி' சொல்லி அனுப்புவாருன்னு, எண்ணிக்கொள்ளேன், இவ்வளவு 'இலாபம்' இருக்குது

ஊழி:- விளங்குதுங்க... விளங்குது

கா:- என்னுடை சிநேகிதம் ஏற்பட்ட பிறகு, அவர், தனிநாடு கேட்கிற விஷயத்தைக்கூட பத்தோட பதினென்னு செய்துகிட்டாரு... .ஐந்தாண்டுத் திட்டத்தை அலங்கோலப் படுத்திப் பேசறது கிடையாது; இப்படி நமக்கு ஏகப்பட்ட இலாபம் இருக்குது.

ஊழி:- இதை எல்லாம், விளக்கமாச் சொல்லிவிடுங்களேன் நம்ம ஆளுகளுக்கு...

காம:- சுத்த ஏமாளியா இருக்கறயே, நம்ம ஆளுகளுக்கு விளக்கமாச் சொனனு, பெரியவரோட கட்சி ஆட்கள் விசாரப்படமாட்டாங்களா......என்னடா இது, பெரியவரு காமராஜர்கூட நேசமா இருப்பது, ஆராய்ந்து பார்த்தா, நம்மோட கொள்கைக்கே ஆபத்தாத்தான் இருக்குது, காங்கிரசுக்குத்தான் அந்தச்சினேகிதத்தாலே, இலாபம் பல விதத்திலேயும் இருக்குதுன்னு தெரிஞ்சி, சங்கடப் படமாட்டாங்களா...?

ஊழி:- ஆமாங்க.... அதுவும் உண்மைதான்.

காம:- அதனுலேதான், இப்படி உன்னேப்போல, தனியா வந்து பார்க்கிறவங்களிடம் நான், விளக்கம் சொல்றேன். தேர்தல் முடிகிற வரையிலே, நாம இந்த 'கறவைப் பசுவை' விடப்படாது, ஐயா, விடப்படாது... ஆமா! நான் காரணமில்லாமலே, சினேகிதம் செய்து கொண்டிருப்பனு! கெண்டையை வீசினு, விரால் கிடைக்கும்னு, நம்பு. பெரியவரே, எழுதியிருக்காரு, காமராஜர் எப்பவும்'காங்கிரஸ் பக்தர்'னு...தெரியுதா...

ஊழி;- உங்களோட காங்கிரஸ் 'பக்தி' எங்களுக்குத் தெரியாததுங்களா...

காம:- 'பக்தி'மட்டுமல்லய்யா...... 'யுக்தி' இருக்குது, அதையும் தெரிஞ்சிக்க வேணும்... தெரியுதா...

ஊழி:- உங்களோடபக்தியும் யுக்தியும், யாருக்கு வரும்...இனி நான் சும்மா இருக்கப்போறதில்லேங்க......ஆமா, கிராமம் கிராமமாக இதைச் சொல்லி வைப்பேன்...

காம:- இரு, இரு...வெளிப்படையாச் சொல்லிக் காரியத்தைக் கெடுத்துவிடாதே...ஆமா... இந்த ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ஒரு நாடகக் கோஷ்டி ஏற்படுத்த முடியுமா......உன்னுலே...

ஊழி:- நீங்க உத்தரவிட்டாசெய்து முடிச்சுட்டறேன்......இதுக்கு என்னங்க கஷ்டம்...

காம:- செய்துபாரு, யோசனே. அடுத்த மாசம், முடிக்கலாம்.

## வாழ்க மணமக்கள்

"திராவிட நாடு" அலுவலகத் தோழர் நாராயணசாமி—சரோஜா வாழ்க்கை ஒப்பந்த விழா 2—9—56ல் தோழர் ஈழத்தடிகள் தலைமையில் காஞ்சீபுரத்தில் நடைபெற்றது.

★

9—9—56ல் "திராவிட நாடு" அலுவலகத் தோழர் ஏழுமலே—முனியம்மாள் திருமண விழா தோழர் பூஞ்சோலே அவர்களின் தலேமையில் சிறப்புற நடைபெற்றது.

★

14—9—56ல் தோழர் செந்தாமரை—இலட்சுமி இல்வாழ்வு விழா தோழர் ஈழத்தடிகள் தலேமையில் நடைபெற்றது.

ஊழி:- நம்ம பக்கத்திலே, ஒரு மகா நாடு போடணுமுங்க, எலக் ஷனுக்கு முந்தி.

காம:- போட்டாப்போச்சி, அதுக் கென்ன.

ஊழி:- இந்திராகாந்தி வருவாங் களான்னு, கேட்கறுங்க.

காம;- அடெடே! காங்கிரஸ் மகா நாடுபோட உத்தேசமா?

ஊழி:- ஆமாங்க...நம்ம கட்சி மகா நாடுதான்.

காம:- ஏன்யா! அதைவிட, புத்தர் மகாநாடு திருக்குறள் மகா நாடு, இப்படி ஏதாவது போட்டா?

ஊழி:- புரியுது, புரியுது...போட றது..எல்லோரையும் அழைக் கறது...

காம: இந்த முன்னேற்றத்தா னுங்க மட்டும் வேணும்...

ஊழி:- சரி...அவனுங்க வந்தா கொஞ்சம் கூட்டம் வருது...

காம:- கூட்டம் வரும்...ஆனு, அவரு வரமாட்டாரு,

ஊழி:- அதுவும் அப்படியா... நமக்கு ஏதுக்குங்க சங்கடம்...

காம:- 'யுத்தி'தான்யா, இப்ப நமக் கெல்லாம் 'கத்தி'—தெரியுதா ...

ஊழி:- தெளிவாகத் தெரியுது... ஏங்க, தேசிய கலா சேவா சபான்னு பேர்வைக்கலாமா...

காம:- ஏதுக்குப் பேர்?

ஊழி:- அதுதாங்க, நீங்க சொன் னிங்களே...?

காம:- மகாநாடு விஷயமாத்தானே சொன்னேன்...

ஊழி:- அதுக்கு முந்தி சொன்னிங் களே... ஐந்தாண்டுத் திட்ட பிரசாரம்...

காம:- அடே, அதுவா, மறந்து விட்டேன்...

ஊழி:- இதுதாங்க, எங்களோட பயமெல்லாம்...எங்க விஷ யத்தை மறந்து விடுவிங் களோ என்கிற பயம்தான்.

காம:- அந்தப் பயமே வேண்டாம் ...நான் எப்பவும், உங்களோட சேர்ந்து வளர்ந்தவனுச்சே... இந்தச் சினேகிதமெல்லாம் எனக்கு 'சாஸ்வதமா'...? இருக்கிற வரையிலே, என் னென்ன இலாபம்னுதான், என் குறி இருக்கும்...தெரி யுதா...

ஊழி:- நேரமாகுதுங்க...டெலி போன்கூட அடிச்சிகிட்டே இருக்குது...நான் வாரேனுங்க வந்தேமாதரம்.

காம:- ஜெய்ஹிந்! நமஸ்காரம்...

*

## காட்சி 3

**இடம்:-** திராவிட கழகத் தோழர் இல்லம்

**இருப்போர்:-** திராவிட கழகத் தோழர்
திராவிட முன்னேற்ற கழகத் தோழர்
ஆபீஸ் ப்யூன்
ஆளவந்தார்.

**காலம்:-** சனிக்கிழமை மாலை 7 மணி.

தி. மு. க:- இந்தக் காத்தமுத்து, என்ன பேசினுராம், காமராஜர் என்ன சொன்னுராம்... அடடே! என்ன, கண்ணிலே ஏதாவது தூசி விழுந்ததா...

[ஆபீஸ் ப்யூன் ஆளவந் தார் வருகிறுர்]

ஆள:- ஏன், தம்பி! இன்னும் அதை எண்ணியா கண்ணைக் கசக்கிக்கிட்டு இருக்கறே

தி. மு. க:- கண்ணீர்த்துளி!

ஆள:- நீ, வேறே, தம்பியோட மனம்தான் தணலாக் கிடக் குதே

தி.மு.க:- நண்பா! கவலைப்படாதே, ஆளவந்தார், எனக்கு விவர மாகச் சொன்னுர், காமராஜர், காத்தமுத்து சம்பாஷணையை

தி. க:- உன்னிடமும் சொல்லி யாச்சா.

ஆள்:- என் எரிச்சல் இன்னமும் அடங்கலையே, தம்பி, காம ராஜரைப் பெரியார் ஆதரிப் பதாலே, நமக்குத்தான் இலா பம்னு நீ சொல்லிச் சொல்லி, நானும் நம்பிக்கொண்டுதான் இருந்தேன்.

தி. மு. க:- ரெண்டு பேருமாச் சேர்ந்து, என்னைத் திருத்தக் கிளம்பினது கொஞ்சநஞ்ச மில்லையே...

தி. க:- தாறுமாருகக்கூடப் பேசி னேம்...

ஆள:- காத்தமுத்துவிடம் காம ராஜர், விவரம் விவரமாப் பேசப் பேச என் மனம் படாத பாடு பட்டுது, போயேன்...

தி. க:- என்னிடம், நீ சொன்னது, என் மனசிலே நெருப்பை வாரிக் கொட்டினதுபோ லாச்சி...

தி. மு. க:- எனக்கு, ஆளவந்தார் சொன்னது கேட்டு ஆச்சரி யம் ஏற்படவில்லை—ஏன்...... எனக்குத் தெரியும், காமராஜர் எண்ணம் இப்படித்தான் இருக்கும் என்று...

ஆள:- எவ்வளவு புட்டுப்புட்டுச் சொன்னுர் தெரியுமா...இந்த காத்தமுத்து, வெளியேவந்து விழுந்துவிழுந்து சிரிக்கிருன் ...

தி. க:- ஏன் சிரிக்கமாட்டான்...... நம்மை எல்லாம் ஏமாற்றிவிட் டாரே, தன்னேட காமராஜர் என்கிற தெம்பு

தி. மு. க:- எல்லாம் நல்லதாகத் தான் முடியும்...வருத்தப் படாதே...

தி. க.:- வேதனையா இருக்குதப்பா

ஆள:- ஏம்பா.......ஐயாவிடம் சொன்னு, என்ன...?

தி. க.:- நாமா...நம்புவாரா?

தி. மு. க.:- சொல்லலாம், ஆனு நாமதான், அந்தப் பழக்கத் கத்தையே வைத்துக்கொள்ள வில்லையே.

ஆள:- ஆமாம், அதுவும் உண்மை தான...

தி. க.:- சொன்னு, ரொம்பக் கோபிப்பாரு...

தி.மு.க.:- அவரிடம் போய்இதைச் சொன்னு, தீர்ந்தது, நீங்க ளும் கண்ணீர்த் துளியாக வேண்டியதுதான்.

ஆள:- இனிமேலே யாராகப் போவுது, தம்பி, இப்பவே கண்ணிலே தண்ணி தளும் புதே......

★

# தணலில் தங்கம்

மா. கி. தசரதன்

**அன்**றிரவு கணவனுடன் நான் பெற்ற இன்பத்தினை ஊமை இன்பம் என்றுதான் சொல்ல வேண்டும். எங்கள் வீட்டில் தங்கி இருந்த போதெல்லாம் இன்பக் கதை பேசி இரவெல்லாம் விழித்திருந்த நாங்கள் அன்று இரவு முழுவதும் ஊமையராகவே இருந்தோம். உட்கார் என்பதற்கும் தண்ணீர் வேண்டும் என்பதற்கும்கூட கணவன் நாவின் துணையை நாடாமல் கையின் துணையை நாடிடும் சைகையரா க இருந்தார்.

ஒரு நாளைப்போல் வீட்டு வேலை களைச் செய்து உண்டு உறங்கும் மனித இயந்திரமாகத்தான் நான் மாறி வருகிறேன். காரணமில்லாமலே ஓரகத்தி என்னுடன் பகை வளர்த்து வருகின்றாள். முள்மேல் நிற்பதுபோல் வேதனையை அனுபவித்து வருகிறேன் நான்.

வயிற்றின் பசிக்கு வேளைக்கு உணவும், (அலுத்து) உறங்க வசதிகளும் இருந்துவிட்டால் மட்டும் போதுமா? கணவனுடன் பழகஇயலாதசூழ்நிலை. அன்பு பிறக்க வேண்டிய இடத்திலிருந்து அருவை, இதை எப்படி நான் தாங்கிக்கொள்வேன்? சிறு வயதில் அம்மா ஏதாவது சுடு சொல் கூறிவிட்டாலும் 'ஓ'வெனக் கதறி அழுதுவிடுவேன் நான். என்னோடு பழகும் தோழியர் விளையாட்டில் என்னைச் சேர்க்காது புறக்கணிக்க நேர்ந்தால் அவர்களை வைது என் ஆத்திரத்தைத் தணித்துக்கொள்வேன. ஆனால் இங்கே நான் என்ன செய்வது? குடும்பத்தில் எல்லோர்க்கும் இளையவளாக இருந்து அடிமைபோல் கிடக்க வேண்டியவளாகின்றேன், யார்மேல் என் கோபத்தைக் காட்டுவது? இங்கு என்னோடு பழகும் வாய்ப்பு யாருக்கும் இல்லை. அவர்களிடமாவது என் மனக் குறையைக் கூறி அழலாம் என்று நினைத்தால், அண்டை அயல் வீட்டார்கள் இங்கே வருவதும் அரிது. அப்படி வருகின்ற போதும் ஓரகத்தியே அவர்களிடம் பேசி அனுப்பிவிடுகின்றாள்.

காலை நேரமாவது எப்படியோ கழிந்து விடுகின்றது. வீட்டு வேலைகளைச் செய்து முடித்துப் பகல் உணவையும் சமைத்து வைக்கின்ற போது பள்ளிக்கூடம் விடும் நேரமாகி விடுகின்றது. பிறகு எல்லோருக்கும் உணவு படைத்து கடனுக்கு நானும் இரண்டு வாய் அள்ளிப்போட்டுக் சொண்டால் மணி இரண்டரை ஆகி விடும்.

பிற்பகல்தான் ஒருநாளைப்போல் தொல்லை தரும் பொழுதாகின்றது. ஆண்கள் இருவரும்தான் ஏதாவது வேலையாக வெளியில் போய்விடுகின்றார்கள் என்றால் பெண்ணாகப் பிறந்த ஓரகத்தியும் ஒரு நாளைப்போல் வெளியில் ஏதாவது வேலை என்று போய் விடுகின்றாளே. பெண்கள் வெளியில் போவது குற்றம் என்று நான் நினைக்கவில்லை. அலுவலகத்தில் வேலை செய்வதற்கும், கடைத்தெரு சென்று பொருள்கள் வாங்குவதற்கும் அடிக்கடி சந்திக்காத நண்பர்களைப் காண்பதற்கும் நகரங்களில் இருக்கும் பெண்கள் வெளியில் போய்த்தான் ஆகவேண்டும், இந்த நாட்டுப்புறத்தில் இவளுக்கு எங்கே என்ன வேலை இருக்குமோ தெரியவில்லை, நாள்தோறும் வெளியில் புறப்பட்டு விடுகின்றாள்.

பகை காட்டுகின்றவள்தான் என்றாலும் உடன் இருக்கின்றாள் என்ற உணர்ச்சியே கொஞ்சம் மன ஆறுதல் தரவல்லது. அந்த ஆறுதலும் இன்றி நான் அல்லல்பட நேருகின்றது இங்கு.

இரவு வந்ததும் மீண்டும் அதே ஊமை ஆட்டம். அந்த ஊமை ஆட்டத்திற்கும் சில நாட்களில் ஆபத்து வந்துவிடும். களத்து மேட்டுக்குக் காவல், அறுவடை அலுவல் என்று ஏதாவது வேலை வந்துவிட்டால் கணவன் இரவு நேரங்களில் வெளியில் தான் தங்குவார்.

என் வாழ்வு இப்படித்தான் கழிந்துவிடுமா? எத்தனை நாட்கள் இப்படியே பொருமுவதும் பொங்குவதுமாகவே கழிப்பது? என் வாழ்வில் என்றுமே இருள்சூழ்ந்த இரவுதானா? எழில்சேர் காலையோ இன்பம் கூட்டும் மாலையோ காணவே இயலாதா?

ஒட்ட முடியாமல் தவித்த என் மனதிற்கு ஆறுதல் தரக்கூடிய வகையில் அந்த ஊரில் இருந்தவர் ஒருவரே, அவர் உறவினர் அல்ல என்றாலும் ஊரில் எல்லோர்க்கும் மிகவும் வேண்டியவர். ஊர்ப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருந்து வருகின்றார். கற்ற கல்வி சிறிதுதான் என்றாலும் பெற்ற அறிவு பெரிதும் உடையவர். அனுபவத்திலும் மிக்கவர். ஊரில் யாருக்கு என்ன வேலையானாலும் அவரையும் ஒரு சொல் கேட்டுத்தான் செய்வார்கள்.

நீண்டு வளர்ந்த அவர் உருவத்தையும், அகன்ற நெற்றியையும், தூய்மையான உடைகளையும், புன்னகை தவழும் இதழ்களையும் காணும்போதே எனக்கு அவரிடத்தில் ஒருவிதமான மரியாதை பிறக்கும். எங்கள் வீட்டிற்கு எப்போதோ ஒருமுறைதான் வருவார். வரும்போதெல்லாம் நெடுநேரம் பேசிக்கொண்டிருப்பார். அவர் பேசும்போது நான் கதவின் மறைவில் நின்று உற்றுக் கேட்பது வழக்கம். வாழ்க்கையில் கைக்கொள்ளவேண்டிய உயர்ந்த நீதிகளையும், வாழும் முறைகளையும் மிக மிக எளிமையாக வேடிக்கையாகக் கூறிக்கொண்டிருப்பார்.

முன்பெல்லாம் இரண்டொருமுறை "நலன்தானே அம்மா? மகிழ்ச்சியாக இருக்கின்றாயா?" என்று என்னைக் கேட்டிருக்கிறார். அப்போதே என் மனத்தில் இருந்ததைக் கொட்டிவிடலாமா என்று எண்ணியதுண்டு. ஆனால் அதற்கு வேண்டும் துணிவு இன்றியும், வேற்றாரிடம் வீட்டுச் சேதியைச் சொல்வானேன் என்று அஞ்சி அடங்கியும் உடன்பட்டாற் போல் தலையாட்டிவிடுவேன். அவரிடமாவது என் மனக்குறை தீர்க்கும் மருந்து பெறலாம் என்றால்,

ஏன் என்று சொல்வது எனக்கு அந்தப் பேறும் வாய்க்கவில்லை அவரை வேற்றூருக்கு மாற்றிவிட்டார்கள்.

யாருக்கும் ஒரு கெடுதியும் நினைக்காது, கடமைகளைச் செம்மையாகச் செய்துகொண்டிருந்த ஆசிரியரைத் திடீரெனப் பிறந்த மண்ணைவிட்டு வேற்று மண்ணுக்கு அனுப்பிவிட்டார்கள். யாரோ மாவட்டக் கழக உறுப்பினர் ஒருவர்க்கு வேண்டிய ஆசிரியரை இந்த ஊரில் வேலைக்கமர்த்த வேண்டும் என்று இவர் தலையில் கை வைத்துவிட்டார்கள்.

நாளுக்கு நாள் ஓரகத்தியின் கொடுமை வளர்ந்து வளர்ந்து எல்லை கடந்து போகின்றது, 'ஏண்டி' 'ஏண்டி' என்றுதான் அழைக்கின்ருள் அவள், எனினும் பெரியவள் என்னை 'ஏண்டி' என்று அழைப்பதில் தவறில்லைதான். என்னிடத்தில் அன்பு கொண்டவளாக இருந்து ஏண்டி என்று அழைத்தால் அதைப்பொறுத்துக் கொள்ளலாம்; ஆசையாக ஏற்றுக்கொள்ளலாம்;

ஆனல் இவளோ என்னைப் பகை என்றே ஒதுக்கித் தள்ளிவிட்டு 'ஏண்டி' என்ரு அழைப்பது. அன்பு மழை பொழிந்து ஆசையுடன் 'தங்கம்' என்று வாய் மணக்க அழைத்த என் அன்னை எங்கே? இவள்எங்கே?

என் தாயின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு 'அம்மா' எனக் கதறிக்கதறி அழவேண்டும் என்று தோன்றுகின்றது. என்ன செய்வேன். எப்படி அவர்களுக்குச் சேதி சொல்லி அனுப்புவேன்?

சேதி சொல்லி அனுப்பினல்தான் என்ன? என்னை வந்து அழைத்துப் போக எண்ணுவார்கள். நான் என் தாயகத்துக்குப்போனல் மீட்டும் இங்கு வராமலே போய்விட்டால்... வேண்டாம். என்ன ஆனலும் நான் படும் துன்பம் அவர்களுக்குத் தெரியவே கூடாது என்று என் மனதைக் கல்லாக்கிக்கொண்டேன்.

முன்பெல்லாமாவது எவ்வளவோ மேல் என்று சொல்லலாம். என்னைப் பகைத்து ஒதுக்கி வைக்கின்ற அளவில் ஓரகத்தியின் மனம் திருப்தி கொண்டு நின்றது. ஆனல் இப்போதோ துன்பம் மேலும் தொடர்கதை ஆகின்றது புதுப்புது வழிகளில்.

செல்வமாக வளர்ந்த பெண்ணென்ருலும் நான் நன்ருகச் சமைக்கத் தெரிந்தவள்தான். அடுப்படிக்குப் போவதே இழுக்கு என்று கருதியவளும் அல்ல. இங்கு வந்தது முதல் இதுவரை ஒரு குறையும் இல்லாமல் தான் சமைத்து வந்தேன்.

இனி அந்தத் துறையிலும் நல்ல பெயர் எடுக்க முடியாது போல் தோன்றுகின்றது, இதுநாள் வரை 'இனிது இனிது' என்று நாவைச் சப்புக் கொட்டி உண்டு வந்த கணவர் இன்று "இது என்ன குழம்புதானு?" என்றுகேட்டார். அவருடைய அண்ணன் 'ஏன் இன்று சாறு சுவையாக இல்லை' என்ருர், நான் என்ன செய்வேன். நேற்றுவரை என்னிச்சையாக பருப்பும் மிளகும் எடுத்துப் பாகம் செய்தேன். இன்றுதான் ஓரகத்தி "இந்தா பருப்பு; இது மிளகு" என்று அளந்து கொடுத்தாளே. வேண்டிய அளவு பொருள்கள் சேர்க்காமல் குழம்பில் எப்படிச் சுவை காட்டுவது? இதை வெளியில் சொல்லவே எனக்குத் துணிவில்லை. ஒரு தீங்கும் இழைக்காது ஒதுங்கியும் பதுங்கியும் நிற்கின்றபோதே ஓரகத்தி உருட்டி விழிக்கின்ற விழிகளில் அச்சம் காணுகின்றேனே; இன்றும் இதை வேறு சொல்லி அவள் பகையை ஏன் வளர்த்துக்கொள்ள வேண்டும் என அமைதியாக இருந்துவிட்டேன்.

என்னுடைய அடக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவள் அதிகமாக ஆடத் தொடங்கிவிட்டாள். இதுவரை தான்மட்டும் என்மீது பகை காட்டி வந்தது போதாதென்று என் கணவனுக்கும் அவருடைய அண்ணனுக்கும் என்மீது வெறுப்பு மூட்ட நினைக்கிருள். நான் வேண்டுமென்றே குற்றமிழைக்கின்றவள்போல் அவர்கள் கண்முன் காட்ட நினைக்கின்ருள்,

கூடி வாழுகின்றதினல்தானே இத்தத் தொல்லைகள். தனியே பிரிந்து கணவனும் நானுமாகத் தனிக்குடி போகலாம் என்றுங்கூட என் மனம் சில நேரங்களில் நினைத்ததுண்டு. அப்போதெல்லாம் கடுமையான அடக்குமுறையை வீசி என் மனக் குரங்கை அடக்கிவிடுவேன்.

கிராமங்களில் எத்தனையோ குடும்பங்களில் இளைய மருமகள் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானதை கேட்டிருக்கிறேன் "ஒற்றுமையாய் வாழ்ந்தார்கள். ஊரில் அவர்கள்போல் இருந்தவர்களே கிடையாது, ஆனல் இளையவனுக்கு வந்துவாய்த்தாளே ஒருத்தி, அவள்தான் அந்தக் குடும்பத்தை பிளவு படுத்திவிட்டாள். அவள் குலமே அப்படித்தான்" என்று வெறுவாய் மென்று வீண்பொழுது போக்குபவர்கள் கூறிடக் கேட்டிருக்கிறேன். அந்த அவச்சொல் எனக்கு ஏன் என அஞ்சி அடங்கிவிடுவேன்.



கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்டு என் நிலைபற்றி எண்ணி இரங்கிக்கொண்டிருந்தேன். ஓரகத்தியும் அப்போது வீட்டில் இல்லை. ஆண்கள் இருவரும் வெளியே போனவர்கள். யாரோ ஒரு கிழவி கூனல் நடை பயின்று மெல்ல உள்ளே வந்தாள். அந்தப் பாட்டியை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேனே ஒழிய பழக்கம் மிகுதியாகக் கிடையாது.

"உட்காருங்கள் பாட்டி" என்று மனையை எடுத்துவந்து இட்டேன்.

"எனக்கு ஏன் மனையும் திண்டும்" என்று சொல்லிக்கொண்டே அந்த அம்மாள் தரையிலேயே உட்கார்ந்தார்கள்.

"அவள் இல்லையா உன் ஓரகத்தி?" என்று கேட்டாள்.

"இல்லையே பாட்டி. என்ன வேண்டும்" என்றேன்.

"எனக்கென்னடியம்மா வேண்டும்? இல்லையா என்று கேட்டேன். ஆமாம் சொக்கப்பன் எங்கே" என்ருள்.

"வெளியே போனர் பாட்டி" என விடை கூறினபிறகு பாட்டி பலவற்றைக் குறித்துப் பேசிவிட்டு,

"உன் ஓரகத்தி எங்கே தான் போயிருக்கிருள்?" என மீண்டும் ஒரு முறை கேட்டாள். 'எனக்கென்ன தெரியும்' என்று சொன்னதற்கு "தெரிந்துகொள்ள வேணும் கொழந்தே. உன்னைப் பார்த்தால் என் மனது மிக இரங்குகின்றது. விழிப்பாகவே நடந்துகொள்" என்று எனக்கு அறிவுரை கூறிவிட்டு "என்னமோ இந்தக் காலத்துப் பெண்கள் மச மச என்று வளர்ந்துவிடுகிருர்களே தவிர புத்திசாலித்தனம் இருப்பதில்லை என்றுதனக்குத்தானே பேசிக் கொள்வதுபோல் சொன்னலும் எனக்கு சொல்வதுபோலவேசொல்லி விட்டுப் போனர்கள்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஓரகத்தி வீட்டிற்கு வந்தாள்.

அவள் வரும் வழியில் அந்த கிழவியைக் கண்டிருப்பாள்போல் தோன்றுகின்றது.

"எப்போது வந்தது அந்தச் சனியன்" என்று இரைந்தாள்.

"யாரைக் கேட்கின்றீர்கள்"

"யாரையா? இப்போ போயிற்றே அந்தக் கிழத்தைத்தான் கேட்கின்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதகர்களைப் பாருக்குக் காட்டு, காரி உமிழட்டும் கற்றறிந்தோர், சட்டம் அதன் சக்தியைக் காட்டட்டும்.

ஈடு செய்யமுடியுமா இந்தப் பெரும் இழப்பை —ஏது? ஏது?

எம்மிடம் பேச்சாளரும் எழுத்தாளரும் நிரம்ப இருக்கிறார்கள் — நடிகர்கட்குக் குறைவில்லை—நல்லோருக்குக் குறைவில்லை—வல்லோருக்கும் குறைவில்லை — ஆனால் நமது சாமி, நல்லவர், வல்லவர், எனும் இரு அருங்குணமும் ஒருருவாய் அமைந்து, பேசுவோருக்கும் எழுதுவோருக்கும் பெருந்துணையாய், பேசப்படத்தக்க பெரும்பொருளாக அல்லவா விளங்கிவந்தார்—அவரல்லவா அனியாயமாக வெட்டி வீழ்த்தப்பட்டார். செயல்முறையிலே ஓர் நாட்டம், செயல்படுவதிலே ஓர் தனி ஆர்வம், செயலில் ஓர் எழுச்சி — இவை யாவும் ஒருங்கு அமைந்த ஓர் படைத் தளபதி அல்லவா நம் சாமி! கட்டளையிட்டுவிட்டுக் கண்ணயர்பவரா, உத்தரவு பிறப்பித்துவிட்டு உறங்கச் செல்பவரா, அல்லவே; படை அமைத்து, படை வரிசையை நடத்திச் சென்று, பணியாற்றி வெற்றி காணும், வீரம் செறிந்த தலைவராக அல்லவா விளங்கிவந்தார்.

நரை முளைக்காப் பருவம் — நாற்பதுக்குச் செல்லவே இன்னும் எட்டாண்டு செல்ல வேண்டும் — போய்விட்டானே அந்த வாலிப வேந்தன்—எப்படித் தாங்கிக்கொள்வோம்!

அழுகிறேன், அழுகிறீர்கள், அழுகிறோம்—நம்மை அழவைத்துவிட்ட அக்ரமக்காரர்கள் எங்கோ இருந்துகொண்டு சிரிக்கிறார்கள், பெருமைப்பட்டுக்கொண்டிருந்தீர்களே, எங்கள் சாமி, எங்கள் சாமி என்று, மார்தட்டித் தட்டிப் பேசினீர்களே, எங்கள் சாமி, எங்கள் சாமி! என்று எங்கே உங்கள் சாமி? என்று கேட்கின்றனர்: ஐயயோ? என்னபதில் சொல்லுவோம். வேதனையால் தாக்கப்படுகிறோம்; படுபாவிகளா! எங்கள் சாமியைப் படுகொலை செய்துவிட்டீர்கள், பாதகம் புரிந்துவிட்டீர்கள், பண்பற்றவர்களே! எங்கள் சாமியின் உடலைத்தான் வெட்டி எறிந்தீர்கள், அவர் உள்ளம் எங்களோடு இருக்கிறது, வேறெங்கும் செல்லவில்லை, அது அழிந்துபடவில்லை, எங்களோடு இருக்கிறது; எங்களுள் இருக்கிறது, நாங்கள் யாவரும் கே. வி. கே. சாமிகளாகிறோம், அவர் காட்டிய ஆர்வத்தைக் கொள்கிறோம். அவர்பெற்றிருந்த ஆற்றலைப் பெறுகிறோம், பேயர்களே! எங்களையும் கொலை செய்ய, கத்தி தீட்டுங்கள், அரிவாள் எடுங்கள், வாருங்கள், நாங்கள் சாக அஞ்சும் பரம்பரை அல்ல, என்றெல்லாம் தம்பி, கூறத் தோன்றுகிறது, நாஎழமறுக்கிறது, அழுகிறோம், அழுகுரல் கேட்கிறோம், ஆறுதல் பெறமுடியவில்லை, ஆறுதல் அளிக்கச் சக்தி இல்லை. ஒருவரை ஒருவர் காணும்போது கண்ணீரைத்தான் பரிமாறிக்கொள்கிறோம். மறைந்த மாவீரன் குடும்பத்தாருக்கு நாம் என்ன ஆறுதல் கூற முடியும். நாமும் அவர்கள் கூட நின்று கதறித் துடிப்பதன்றி வேறென்ன செய்யும் நிலை இருக்க முடியும். அவர் நமது சாமியாயிற்றே, அழுகிறோம், அழுகிறாய், அழுகிறேன், தம்பி, செய்தி கேட்டதிலிருந்து வேதனையால் தாக்கப்பட்டுக் கிடக்கிறேன் — வேறு எதுவும் எழுத முடியவில்லை—

அன்பன்

அண்ணாதுரை

---

றேன்'' என்று பொரிந்ததும்தான் சற்று முன்வந்த கிழவியைக் குறிப்பிடுவதனை உணர்ந்தேன். அவள் வருவதிலும் போவதிலும் இவளுக்கு என்ன கோபம்? ஒருவேளை அவள் நல்லவள் அல்லவோ என எண்ணிக் குழம்பினேன். எப்படியாயினும் இப்போது ஏதாவது பதில் சொல்ல வேண்டுமே என, ''சற்று முன்தான் உங்களைத் தேடிவந்தார்கள். நீங்கள் இல்லை என்றதும் போய்விட்டார்கள்'' என்று புளுகினேன். நான் மனமறிந்து வேண்டும் என்றே புளுகியது இதுதான் முதல் முறை.

நான் சொன்னதை அவள் நம்பாதவள் போல் குறிப்புக்காட்டிவிட்டு, ''இனிமேல் அந்தச் சனியனை எல்லாம் வீட்டிற்குள் சேர்க்காதே. பொல்லாததுகள்'' என எனக்கு அறிவுறுத்திவிட்டு அப்பால் சென்றாள்.

அதைப்பற்றிய பேச்சு அத்துடன் தீர்ந்தது என்று நினைத்தேன். ஆனால் இரவு கணவர் உண்ணும் போது ஓரகத்தி மீண்டும் அந்தப் பேச்சைத் துவங்கினாள்.

''அந்தச் செங்கமலக் கிழவி இங்கே வந்திருந்தாளாம்'' என்றாள்.

''அவளுக்கென்ன வேலை இங்கே. நீ ஏன் அவளைச் சேர்த்தாய்'' என்று என்மீது கோபக் கணையை வீசினார்.

இதுவரை படுக்கை அறையில் ஊமையாக இருந்த கணவன் அன்றிரவு பெரிய சொற்பொழிவாளராக ஆகிவிட்டார். பகலில் வந்துபோன கிழவியைப்பற்றியேதான் பேசித் தீர்த்தார். அவர் நெடுநேரம் எனக்கு அறிவுரை கூறிக்கொண்டிருந்தார் என்றாலும் அது மிகமிகச் சிறிய அறிவுரைதான்.

''அந்தச் செங்கமலக் கிழவியை இங்கே சேர்க்காதே. அவள் மிகவும் பொல்லாதவள். நமக்கு ஒருவகையில் உறவுதான். அவள் பேர்த்தியை நான் கட்டிக்கொள்ளவில்லை என்று நம் குடும்பத்துமீது அவளுக்கு ஒரே மன எரிச்சல், அவளை நம்பவே நம்பாதே'' என்பதையே பல முறை பன்னிப்பன்னிக் கூறிக்கொண்டிருந்தார்.

அதைக்கேட்டு அப்படியும் இருக்குமோ என்று என் மனம் நினைத்துத் தொலையுற்றது. பொறுத்துப்பார்ப்போம்; அவளைப்பற்றித் தெரியாமலா போகிறது. நாளைதான் வரப்போகிறாளே என்று எண்ணினேன். மனச்சுமைப் பாரந்தாங்காது தவித்தேன். அலுத்து உறங்கிவிட்டேன். எனக்குத் தெரியாது அப்போது எண்ணத் தொலையாத துன்பம் அநுபவிக்கப் போகிறேன் பிறகு என்று.

(தொடரும்)

# இனி காணப்போறோமோ!

★

—[அரங்கண்ணல்]—

திருச்சி மாநில மாநாடு நடந்து கொண்டிருக்கிறது! இன்னும் சிறிது நேரத்துக்குள் நாடகம் ஆரம்பிக்க வேண்டியதுதான்! பின்புறம் அமைக்கப்பட்டிருந்த நாடகக் காட்சி மைதானமோ மணலடிக்கப்பட்ட நிலையிலேயே கிடந்தது. பெண்கள்—பிரதிநிதிகள் — பார்வையாளர்கள் என்று பிரிக்க வேண்டுமே? மைதானமோ பெரிது! வரிசையாக முளை அடித்து கயிறு கட்டினால்தான், இது முடியும். "என்ன அண்ணாச்சி! இதுக்கா யோசிக்கிறீங்க?" என்று வந்தது ஒரு உருவம்! கடப்பாரையைக் கையிலேந்தியது—அரை மணி நேரத்துக்குள் நாங்கள் அந்த வேலையைச் செய்து முடித்துவிட்டோம். அந்த உருவத்தை, கே. வி. கே. சாமியை இனிக் காண முடியாது என்று எண்ணுகிறபோது? அம்மவோ! சாமி, நீ, உண்மையிலேயே போயாவிட்டாய்? நம்ப முடியவில்லையே, வீரா, நம்ப முடியவில்லையே எம்மால்!

* * *

மாநில மாநாட்டுக்கு நிதி திரட்டுவதுபற்றி சென்னை தியாகராயர் கல்லூரியில் கூடிய பொதுக் குழுவில் ஒவ்வொருவரும் விவாதித்துக்கொண்டிருந்தார்கள். கம்பீரமாக எழுந்து நின்றார் சாமி! "நீ எவ்வளவு சாமி தரப்போகிறாய்?" என்றார், முன்னாள் பொதுச்செயலாளர். 'நீங்கள் தரச் சொல்லுவதைத் தருகிறோம்" என்றார் அந்த வீரன். "ரூபாய் ஐயாயிரம் தருமா நெல்லை?" என்று கேட்கப்பட்டது. உடனே, அந்த கொள்கைக் குன்று கொஞ்சமும் விட்டுக் கொடாது "ஐயாயிரம் என்ன! 5555-ரூபாய் 5-அணா 5-தம்பிடி தருகிறோம்!' என்று கூறிற்று. வெட்டி வருவாயா என்று கேட்டால் கட்டி வருகிறேன் என்று உடனே கூறும் அந்த வெங்கலக் குரலா, மண்ணுக்குள் புதைந்து விட்டது! அந்தக் குரலை இனி நாம் கேட்க முடியாதாமே! அய்யகோ, எண்ண முடியவில்லையே நம்மால்.

* * *

தூத்துக்குடி மாநாடு! — நாம் ஒன்றாக இருந்தபோது நடைபெற்ற அந்த மாநாட்டினை யாரும் மறந்திருக்க முடியாது. அம்மாநாட்டிலே தொண்டர்கள் நடந்துகொண்ட முறையினையும், தலைவர்களுக்கும் மக்களுக்கும் அங்கு செய்து தரப்பட்ட வசதிகளையும்பற்றி இப்போதும் பேசுவர். அவ்வளவு சிறப்பாக அனைவரும் மகிழுவண்ணம் மாநாடு நடைபெற்றது கண்ட பெரியார், "சாமியை இந்த நாட்டுக் கவர்னராக்கலாம். அந்தளவுக்குக் காரியங்களை ஆக்கியிருக்கிறார்" என்று பாராட்டிப் பேசினார். அந்த சாமியின் உழைப்பும் உறுதியும் தி. மு. க. வுக்கு சிறந்ததோர் துணையாக அமைந்தது தென்பாண்டி நாட்டில்! பேச்சும் மூச்சும் பிறந்த பொன்னாட்டுக்கே என்று பணிபுரிந்த செயல் சிங்கம், சாமி. விடுதலைபெற்ற திராவிடத்திலே வெற்றி வீரனாய் வர வேண்டிய வீர உருவம் வீழ்ந்துவிட்டது வெறியர்தம் செயலால். மண்ணோடு மண்ணாகி நாட்கள் பத்தாகி விட்டன. மலைபோன்ற மேனியா, மறக்குடி வீரா, இனி என்றடா காணப் போகிறோம் உனை?

* * *

பொதுக்குழுக் கூட்டங்களில் பேச விரும்புவோர் எழுந்து நிற்கவேண்டும். பொதுச்செயலாளர் அனுமதித்ததும்தான் பேசவேண்டும். ஆனால் நமது சாமிக்கு ஆர்வம் தாங்காது! அடிக்கடி எழுந்து நின்று, தன் இதயக் கருத்தை எடுத்துரைப்பார்! திருச்சி மாநில மாநாட்டின் போது நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில், சில தீர்மானங்களைப் பற்றிக் காரசாரமான விவாதம் நடைபெற்றது. சாமியும், இடையிடையே, எழுந்து நின்று ஏதாவது கூறிவந்தார். அது அவருடைய ஆர்வத்தின் அறிகுறி என்பதை அறிந்த பொதுச் செயலாளர், அனுமதித்தார். ஆனால் ஒழுங்கு முறைக்கு விரோதமாக எவரும நடக்கக்கூடாது என்பதில் கவனமுள்ள உறுப்பினர்கள், "சாமி! ஒழுங்கு, ஒழுங்கு" என்றனர். உடனே, அவர்களை நோக்கிப் புன்சிரிப்புடன், "ஆமாம், தவறுதான். என்னை மன்னியுங்கள்" என்று கூறிவிட்டு அமர்ந்த அந்தப் பெருந்தன்மை-ஜனநாயகத்தைக் காப்பதில் கொண்டிருந்த அக்கரை — தனது தவறினை உணர்ந்து அதனை உவகையோடு ஏற்றுக்கொண்ட உளப்பாங்கு .....ஐயோ...சாமி, என்னத் துடிக்கிறதே இதயம்! என்று காணமுடியும் உன் புன்சிரிப்பை — இனி என்று காணப்போகிறோம் உனது சகோதரர்கள்!!

★

## அர்த்தமற்றதாம்!

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்களும் சட்டசபை உறுப்பினர் கே. விநாயகம் உள்ளிட்ட 250 தோழர்களும் எல்லைக்காக அறப்போரிலீடுபட்டு சிறைக் கோட்டம் சென்றிருப்பதனை அர்த்தமற்றது என்கிறார் அமைச்சர் சுப்பிரமணியம்.

எல்லைவிஷயத்தில் கருத்து வேற்றுமை கிடையாதாம்! தெரிவிக்கிறார். கருத்து வேற்றுமையில்லாதபோது, டில்லியிடம் போராடி, நீதி பெற முனைவதுதானே! எல்லைக் கமிஷன் நியமிக்கும் எண்ணம் தமக்கில்லையென்று தெரிவித்துவிட்டது, டில்லி. இந்நிலையில், என்ன செய்தது சென்னை?

நாடு காக்கும் விஷயத்தில், கோட்டைவிடும் இந்தக் குணாளர்களின் போக்கினைக் கண்டு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை. நடைபெறும் அறப்போரினைக் காட்டியாவது, டில்லிக்கு ஓடி ஏதாவது வழிசெய்ய முயலுவதுதானே? அதற்குப் பதில் கண்டிக்க மட்டும் தெரிகிறது கனவானுக்கு!

# "மெயில்" விடு தூது!

'மெயில்', தூது விடுக்கிறது டில்லிக்கு. சென்னையிலிருக்கும் 'மெயில்' ஏட்டைத்தான் குறிப்பிடு கிறோம்.

*தனிநாடுக் கிளர்ச்சி ஆபத்தானது!—என்றுராம், காமராஜ். அதை ஆதரித்து எழுதக் கிளம்பி அவ்ரையே, தூதுப்பொருள் ஆக்கியிருக்கிறது.*

*தனிநாட்டுக் கிளர்ச்சி கூடாது தான்! ஆனால்... என்று போட்டு,*

வடக்கேயுள்ள ராஜ்யங்களுக்கு கிடைக்கும் சலுகையும், காட்டப்படும் கவனமும், தெற்குக்குக் காட்டப்பட்டது கிடையாது.

இந்தக் கருத்து, தெற்கேயுள்ள சகல அரசியல் கட்சிகளிலும் உலவிவருகிறது.

புதிய ஆலைகளை ஆரம்பிப்பதிலோ, அணைத் தேக்கத் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்குவதிலோ, தெற்கு மிகமிக மோசமாகப் புறக்கணிக்கப்படுகிறது என்பதிலோ எள்ளளவும் சந்தேகமில்லை.

பல தடவை கோரிக்கைகள் விடுத்தும், நமது எண்ணம் ஈடேறும் மார்க்கம் தென்படவில்லை.

மேலும், வடக்கு, இந்தியை நாட்டின் அரசுமொழியாக்கத் தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

பிரசாத்தும் நேருவும், இந்தியைத் திணிக்கவில்லை என்று சொல்லலாம். ஆனால் யூனியன் சர்க்கார் நடைமுறையில் அப்படித்தான் செய்துவருகிறது.

இராணுவம், இரயில்வே, தபால் தந்தி போன்றவைகளை இந்தி மயமாக்கும் காரியம் வேகமாகச் செய்யப்பட்டுவருகிறது.

*இருந்தாலும், இதற்காகத் தனிநாடு கேட்பது நல்லதல்ல, ஆகவே காமராஜர் ஒரு முயற்சியிலீடுபட வேண்டும் என்று எழுதுகிறது.*

*வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலே நின்று, வடக்கிடமிருந்து நீதி வாங்கித் தரும் காரியத்தைச் செய்ய வேண்டுமாம் காமராஜர்! அப்போதுதான், டில்லியைப்பற்றி இங்கு வளர்ந்திருக்கும் ஆத்திரமும் அதிருப்தியும்குறைய வழி ஏற்படுமாம்!*

*400 கோடி கேட்டு 170 கொண்டு வந்திருக்கும் குணாளரைத்தான் தூதராக்கச் சொல்லுகிறது மெயில். தேவிகுளம் பீர்மேடு கேட்டு, நேரு உருட்டு விழி காட்டியதும் 'தண்டம்! தண்டம்!' என்று விழுந்தவர் காமராஜர்! அவரை, 'ராஜவிழி' விழிக்கச் சொல்லுகிறது மெயில்—டில்லிக்கு, அவர்கள் செய்வது அநீதி என்று உணர்த்தும் வேலையை மேற்கொள்ள வேண்டுமாம் காமராஜர். பிரிவினைப் பேச்சின் வலிவைக் குறைக்கும் வழி அது ஒன்றுதானும்! கூறுகிறது மெயில்!*

*'மெயில்' மட்டுமல்ல, டில்லியின் ஓரவஞ்சனையை நன்றாக உணரும் பலரும், நமது கிளர்ச்சியின் வேகத்தை டில்லியின் 'தயவால்' அடக்கிவிடலாம் என்று கருதுகின்றனர்.*

*இப்படிக் கருதி ஏமாந்தோர் மிகப் பலர்! ஓமந்தூரார் முயன்று பார்த்துத் தோற்றார் முதல் மந்திரியாக இருந்தபோது! குமாரசாமியாரும் பல தடவை முயன்று குட்டுப்பட்டார்— ஆச்சாரியாரால்கூட வடக்கின் வக்கிர புத்தியைத் தாங்க முடியவில்லை — ஒவ்வொருவரும் பெருமூச்சு விடாமல் போகவில்லை! இது ஒரு தொடர்கதையாயிருந்து வருகிறது.*

*இத்தொடர் கதையை, ஒரு காமராஜர் அல்ல எத்தனை காமராஜர் வந்தாலும் முடித்துவிட இயலாது. காரணம் வடவர் வேறு, நாம் வேறுதான்.*

*என்னதான் ஒற்றுமை குறித்துப்பேசினாலும், இந்த வேற்றுமை அகலுமென்பது கொஞ்சமும் எதிர்பார்க்க முடியாததாகும். இல்லையெனில் எதெதற்கோ மனம் பதறும் நேருவுக்கு, இலங்கைவாழ் தமிழர்கள் பிரச்னை இவ்வளவு சாதாரணமாகவாத் தோன்றும்? தோழர் அவிஞசிலிங்கம், அண்மையில் நேருவைச் சந்தித்து, "ஐயன்மீர்! இலங்கை வாழ் தமிழர்கள் பிரச்னை குறித்து ஏதாவது செய்யவேண்டும். இந்தக் கழகத்துக்காரர்கள் இதைப் பெரியவிஷயமாகப் பேசுகின்றனர்" என்று எடுத்துரைத்திருக்கிறார். நேரு அளித்த பதில் என்ன? வழக்கம் போல, "இலங்கைவாழ் இந்தியர் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க வேண்டும்" என்பது தவிர வேறெதுவும் கூறவில்லை. அவருக்கு அந்தளவுக்குத்தான் சிரத்தை ஏற்படமுடியும்! எவ்வளவு தான் ஒட்டுப் போட்டாலும், இரத்த பாசம் வேறுதான்—வலுவில் வரவழைக்கப்படும் பாசம் வேறுதான்!!*

*இவ்வளவு தூரம் வருந்தி, டில்லியுடன் இணைந்து வாழவேண்டுபதற்கு, 'மெயிலார்' காட்டும் காரணம் என்ன? இந்தியா பெரிதாக இருக்கவேண்டும் என்பது தவிர வேறு எதுவுமல்ல! பெரிதாயிருந்தால், ஆபத்து வராது—ஆகவே, வடக்கு என்ன அக்கிரமம் செய்தாலும், எப்படியாவது அதைக் கெஞ்சியோ கொஞ்சியோ நீதி பெற்றுக் கொண்டு வாழவேண்டும் என்பது மெயில் கருத்து.*

*இதே கருத்தில், 'கல்கி' ஏடுகூட ஒரு படம் போட்டிருக்கிறது. சின்னஞ்சிறுசாகச் சிதறுண்டுபோபவர்களால், சரியாக வாழமுடியாது —அங்கே கலை செழிக்காது—கல்வி வளராது—விஞ்ஞானம் பெருகாது —வித்தகர்களுக்கு மதிப்பிராது என்று*

*இன்றுள்ள உலக அரங்கில், சின்னது பெரியது என்பதல்ல பிரச்னை. ஐக்கிய நாடுகள் சபையில் சிறு நாடான ஜப்பானுக்கும் ஒரு ஓட்டுதான் — பெரிய நாடான இந்தியாவுக்கும் ஒரு ஓட்டுதான். எனவே, சிறியது என்பதற்காக ஒரு நாடு வாழாமலும் போவதில்லை —பெரியது என்பதற்காக சிறப்பாக வாழ்வதும் இல்லை. பெரியதான இந்தியா எத்தனையோ உதவிகளுக்கு ஸ்விட்சர்லாந்தையும் ஜப்பானையும் நாடவில்லையா?*

*நீண்ட நாட்களாக இருந்து வரும் ஒரு போதையில், நாம் கூறுகிற பிரிவினை, ஒரு திகிலையும் அச்சத்தையும் தருகிறது மெயில் போன்றோருக்கு. நாம் காட்டுகிற ஆதாரங்களையோ, அவர்களால் மறுக்க முடியவில்லை.*

*தூது விடுவதால் துயரம் குறையாது! அப்படிக் குறைந்தாலும், அறவே நீங்காது!*

*துயரம் தொலைந்து, சுதந்திரமாக வாழ விரும்புவதே, திராவிடம் தனியாக வேண்டும் என்பதன்பொருள்.'மெயில்'கள் இதனை அறிந்தால் நல்லது.*

★




## அணுசக்தி

★

அணுசக்தியை எப்படி நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்பது குறித்து வருகிற அக். 26ந் தேதி 81 உலக நாடுகள் நியுயார்க் நகரில் ஒன்றுகூடி ஆலோசிக்கப் போகின்றனவாம். அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற ஒவ்வொரு வல்லரசுகளும் அணுக் குண்டுகளை வெடித்துப் பார்ப்பதில் சளைக்காது ஈடுபட்டு வரும் இச் சமயத்தில் இப்படியொரு முயற்சி நடப்பதை உலகம், மனமார வரவேற்கும், செஞ்சீனுவைத் தவிர்த்து உலகத்திலுள்ள எல்லா நாடுகளும்—ரஷ்யா, அமெரிக்கா உள்பட-மேற்படி ஆலோசனையில் பங்கேற்றுக் கொள்ளுகின்றன. அகில உலக ஏஜன்சி ஒன்று அமைத்து, அதன் மூலம் அணு சம்பந்தமான சகல இரகசியங்களையும் பரிமாறிக்கொள்ளுவதென்பது இப்போதுள்ள திட்டமாகும். இப்படியொரு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று சமாதானம் விரும்பிகள் எல்லாம் பேசி வந்தனர். பேச்சு, செயலாகும் அறிகுறி தெரிகிறது.

❋

## சவூதி அரேபியா

★

இந்த கிழமை 24ந் தேதி என்ணெய் விளையும் நாடான சவூதி அரேபியாவுக்கு நேரு சென்றுள்ளார். அதற்கு முன்தினம்தான், எகிப்துத் தலைவர் நாஸர் தன்னுடைய சவூதி அரேபிய பயணத்தை முடித்துக்கொண்டு ஊருக்குத் திரும்பியுள்ளார். சவூதி அரேபியாவிலிருக்கும்போது நாசர், சிரியா நாட்டுத் தலைவர் கௌட்லீயையும் சந்தித்துப் பேசினார். சூயஸ் பிரச்னையில், சவூதி அரேபியா இப்போது ஒரு முககிய பங்குள்ள நாடாகக் கருதப்படுகிறது.

❋

## சூயஸ்

★

சூயஸ் பிரச்னையை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்ல பிரிட்டனும், பிரான்சும் இப்போது முடிவு செய்துள்ளன. இதனுல், சூயஸ் தகராறு பெரும் போராக மூளுமோ என்று ஏற்பட்டிருந்த பயம் ஓரளவு குறைந்திருப்பதாகக் கருதப்படுகிறது. ஐ. நா. பாதுகாப்பு சபை, புதனன்றுகூடி விவாதிக்குமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீர் முடிவுக்கு பிரிட்டன்வரக் காரணம், கட்ந்த கிழமை இலண்டனில் கூடிய 18-நாடுகள் ஆலோசனைக் கூட்டத்தில் ஏற்பட்ட குளறுபடிகளென்று தெரிகிறது. பிரான்சிலும், சர்க்காருடைய போக்குக்கு அதிருப்தி ஏற்பட்டிருப்பதாலேயே, ஐ நா. சபைக்குச் செல்ல முடிவெடுக்கப்பட்டதாம். தகராறு, ஐ. நாவால் தீர்க்கப்பட்டு விடுமா என்கிற ஐயம் பலருக்கு ஏற்பட்டிருந்தாலும், இந்த முடிவு பலராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது.

❋

## அமெரிக்கா

★

நியுயார்க்கில் இப்போது 'சென்னை'க்கு, கிராக்கி வந்திருக்கிறதாம்! அமெரிக்கர்களில் பலர் 'சென்னை ஷர்ட்' என்று சொல்லிக்கொண்டு புதுவித சட்டைகளைப் போட ஆரம்பித்துள்ளார்களாம். இந்தச்சட்டைகள் இங்கிருந்து ஏற்றுமதியாகும், புடவை வகைகளையும் கைத்தறித் துணிகளையும்கொண்டு தைக்கப்படுகிறதாம். அமெரிக்கப் பெண்கள் எப்படி 'பாரிசை'ப் பின்பற்றி தமது ஆடைகளை அணிகிறார்களோ, அதுபோல அமெரிக்க ஆணகள் 'சென்னை'யைப் பின்பற்ற ஆரம்பித்துள்ளார்களாம். துணி வகைகளில் உள்ள நேர்த்தியும், அழகுமே அமெரிக்கர்களை இவ்வாறு கவர்ந்துள்ளதாம்.

❋

## கோல்டு கோஸ்டு

★

மேற்கு ஆபிரிகாவிலுள்ள கோல்டு கோஸ்டுக்கு 1957 மார்ச்சு 6-ந் தேதியிலிருந்து சுதந்திரம் அளித்துவிட முடிவு செய்திருக்கிறது, பிரிட்டன். கடந்த ஜுலையில் கோல்டு கோஸ்டில் நடைபெற்றதேர்தலில் டாக்டர் குவாமே நிக்ருமாவின் மக்கள் கட்சி 104க்கு 72-இடங்ககளைக் கைப்பற்றியது. சட்டசபை கூடியதும், மேற்படி கட்சி, கோல்டு கோஸ்டுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று கோரும் முதல் தீர்மானத்தை நிறைவேற்றியது. அதையொட்டியே, இப்போது பிரிட்டன், இந்த முடிவுக்கு வந்துள்ளது. 91.843 சதுரமைல் பரப்புள்ள கோல்டு கோஸ்டில் 4,500,000 மக்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய முக்கிய தொழில் விவசாயம்தான். கோகோவும் தங்கமும் அபரிமிதமாக இங்கு கிடைக்கிறது.

❋

## பர்மா

★

கம்யூனிஸ்டுகளால் ஏற்படும் தொல்லை பர்மிய சர்க்காருக்குப் பெரிய தலைவலியாக இருந்து வருகிறது. இதனுல், கம்யூனிஸ்டு தலைவர் டுன் என்பவரை உயிருடன் பிடித்துக் கொடுப்போருக்கு ஒரு இலட்ச ரூபாய் கொடுக்கப்படுமென்று தெரிவித்திருக்கிறது இது சம்பந்தமாக தகவல் கொடுப்போருக்கும், பரிசு அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுளளது. கம்யூனிஸ்டு கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர்களை பிடித்துக் கொடுத்தாலும் ரூ. 50,000 அளிக்கப்படுமென்றும் பர்மிய சர்க்கார் தெரிவித்துள்ளது.

❋

## ரஷ்யா

★

100 வயது நிரம்பியும் வாழ்பவர்கள் ரஷ்யாவில் 40,000 பேர் இருக்கிறார்களாம்! 156 வயதுள்ளவர் தான் பெரியவராம். மலைகளில் வாசம் செய்து அந்தக் காற்றை அனுபவிப்பது, அதிக வயது வாழ உதவுகிறதாம். 150 வயதுள்ள ஒரு மாது அண்மையில் தனது திருமணத்தின் நூருண்டு விழாவைக் கொண்டாடினாராம்.

❋

## ஆங்காங்கே

★

வெளி நாட்டு நிபுணர்கள் வேண்டுமென்று இங்கே டில்லி இறக்குமதி செய்து குவிக்கிறதல்லவா? இதற்கு நேர் எதிர்மாருக இங்கிருந்து வெளி நாடுகள் பல, 'உதவிகளை'க் கோருகின்றனவாம்!! ஆப்கானிஸ்தானம்: ஆசிரியர்கள், பட்டு டெலிபோன் தொழில் நுட்பக்காரர்கள், பாசன இன்சினீயர்கள் தேவைஎன்கிறதாம். இதியோபியா: டாக்டர்கள் நர்சுகள். கோல்டு கோஸ்டு: நிதி, சட்ட நிபுணர்கள். மலேயா: டாக்டர்கள், நர்சுகள். சூடான்: ஆசிரியர்கள். ரஷ்யா: மொழி பெயர்ப்பாளர். கம்போடியா: திட்ட நிபுணர்கள். நைஜீரியா: தொழில் ஆலோசகர்—வேண்டுமென்று டில்லியைக் கேட்டுள்ளதாம்.

REGD. No. M. 4042

# கதை சொல்லும் கடிகாரம்

மணியையும் அதன் பிரிவுகளையும் காட்டுவது மட்டுமல்ல, வேறு எவ்வளவோ வேலை களைச் செய்கின்றது 'ஸ்ட்ராஸ்பர்க்' எனும் நகரில் இருக்கும் கடிகாரம் ஒன்று. நாள், கிழமை, மாதம் இவற்றைக் காட்டுவதற்கும் அதில் ஏற்பாடு செய்யப் பெற்றிருக்கிறது. இது தவிர, மணி காட்டும் 'முகத்திற்கு' இரண்டு பக்கங்களில் இரண்டு பொம்மைகள் இருக்கின்றன. கால் மணி நேரத்திற்கு ஒருமுறை வலது பக்கம் உள்ள பொம்மை ஒரு மணியை அடித்து ஓசை எழுப்புகின்றது. அந்த ஓசையை இளமை, வாலிபம், வளர்ச்சி, வயோதிகம் ஆகிய நான்கு பருவங்களைக் குறிக்கும் வேறு பொம்மைகள் எதிரொலிக்கின்றன. இதுபோல் நான்குமுறை ஆனதும் ஒரு மணி நேரம் கடந்துவிட்டதைக் குறிக்க இடது பக்கத்தில் இருக்கும் பொம்மை தன் கையில் இருக்கும் 'மணிப் புட்டி'யைத் தலை கீழாக மாற்றிப் பிடிக்கும். நடுப் பகலில் கடிகாரத்தின் வேறு ஒரு பகுதியில் ஒரு சிறிய ஊர்வலம் நடைபெறும். இயேசுவின் சீடர்கள் ஒவ்வொருவராக வர இயேசு அவர்களை வாழ்த்தும் செயல் பொம்மைகளால் சித்தரிக்கப்படுகின்றது. இது தவிர காலம் கழிகின்றது, என்பதை உணர்த்த மணிக்கு மணி 'சாவு' பொம்மை ஒரு மணியை ஒலித்துக்கொண்டிருக்கிறது. கடிகாரத்தின் உச்சியில் ஒரு கோழியின் உருவம் உண்டு. நண் பகலில் 'இயேசு தன் சீடர்களை வாழ்த்தும்' போது அது சிறகடித்துக் கூவுகின்றது. இந்தக் கடிகாரத்தின் கீழ், தரையில் உலகத்தை உணர்த்தும் பெரிய உருண்டை ஒன்றுண்டு, அதில் வான மண்டில விண்மீன்கள், திங்கள் இவற்றின் நிலைகள் காட்டப்படுகின்றன.

கதை சொல்லும் இந்தக் கடிகாரம் வளர்ந்த கதை சுவையும் சோகமும் மிக்கது. மெல்ல மெல்ல வளர்ந்து படிப்படியாக மாறி வளர்ச்சி பெற்றதாகும் இது.

14-ஆம் நூற்றுண்டின் இடைக் காலத்தில் இப்படி ஒரு கடிகாரம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதும் திறமைமிக்க பொறியியல் வல்லுநர்கள் பலர் 'ஸ்ட்ராஸ்பர்க்' நகருக்கு வரவழைக்கப்பட்டனர். அவர்களுள் ஒருவர் 1352-ஆம் ஆண்டு இதைச் செய்து முடித்தார். மாதா கோயிலின் உச்சியில் அதை வைத்தாயிற்று.

அதனைத் துவக்கும் நிகழ்ச்சியை விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று எண்ணினர். அழைப்புகள் பறந்தன. குறிப்பிட்ட நாளில் கூட்டம் கட்டுக்கடங்காக் காட்சியாக இருந்தது.

கடிகாரம் வேலையைத் துவங்கியது. விழித்த கண்ணை இமைக்காமல் வேடிக்கையைக் கண்டனர் மக்கள். ஆலய அதிகாரிகளுக்கும் மகிழ்ச்சி தான். ஆனல் ஒருகணம்தான் அந்த மகிழ்ச்சி. வேறு எங்காவது இதுபோல் இவன் செய்து கொடுத்துவிட்டால்.......என்று எண்ணினர். திகைத்தனர். மகத்துவம் போகாமல் இருக்க இதுபோல் வேறு இயற்றப்படக்கூடாது. என்ன செய்வது அதற்கு என்று எண்ணினர். இவன் கண்களைக் குருடாக்கிவிட்டால்... விட்டால்... ஆம். அதுதான் நல்ல யோசனை என்று முடிவு கட்டினர். அந்த முடிவை உடனே செயலாக்கினர். பிறகு சொன்னர்கள் அவர்கள் சிந்தையில் இருந்ததை. அதைக் கேட்டு அவன் அழுதான்; அரற்றினன்; ஐயோ மூடர்களே என்ன காரியம் செய்தீர்கள்! இன்னும் வேலை சரியாக முடியவில்லையே. ஒரே ஒரு பாகம் — ஒரே ஒரு பாகம் — எஞ்சி நிற்கின்றதே—எனக்குத்தானே அது தெரியும் — அது இல்லாமல் இந்தக் கடிகாரம் பயனற்றது ஆயிற்றே! ஐயோ மூடர்களே! என்று புலம்பினன்.

சூழ்ந்திருந்தவர்கள் அவனை மெல்லத் தூக்கி அந்தப் பொறியின் முக்கிய சக்கரத்தின் பக்கத்தில் நிறுத்தி அதைச் சரி செய்துவிடு என்றனர். அதனை அவன் இரு கைகளால் பிடித்தான். இப்படி ஒரு சுற்று; அப்படி ஒரு சுழற்சி; அந்தச் சக்கரம் தூள் தூளாயிற்று; ஓடிய கடிகாரம் ஓய்ந்துபோயிற்று; பயனின்றிப் பாழ்பட்டது. ஆலய அதிகாரிகளின் முகத்தில் அசட்டுக்களை தாண்டவமாடியது.

மீண்டும் 1550-ம் ஆண்டு கணித வல்லுநர்களை எல்லாம் அழைத்து அந்த வேலையில் ஈடுபட்டனர். ஆனல் வேலை நடைபெறவே இல்லை. 1560-ம் ஆண்டில் கான்ரட் ரவுச்பஸ் என்பார் முயன்றார். அதன் பிறகு பலமுறை பலர்முயன்று முயன்று இறுதியாக 1842-ம் ஆண்டுதான் அந்தப்பணி முற்றுப்பெற்றது.

கடிகாரமும் ஓடத் துவங்கியது.

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்